# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 311 | சனி, நவம்பர் 02, 2024 | 14 பக்கங்கள்


பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட 7 போராளிகளின் 17 வது நினைவாண்டின் நினைவாக...



## 17ஆம் ஆண்டு நினைவில் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பற்றிய நினைவுப்பகிர்வு

பா.அரியநேத்திரன்






## விஜய் - அரசியல் வருகை! எதிர்ப்பும் எதிர்காலமும்!

சட்டவாளர் ஆதி



குடியரசுக்கட்சி வாக்காளர்களைக் கவர்ந்திழுக்க



## கமலா ஹரிஸ் மேற்கொள்ளும் முயற்சி வெற்றிபெறுமா?

தமிழில்: ஜெயந்திரன்




© 2024 இலக்கு இணையம்

## பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு அநுராவுக்கு மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் கடிதம்



பயங்கரவாத தடைச்சட்டம் இணையவழிபாதுகாப்பு சட்டம் ஆகியவற்றை நீக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம் என மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் ஜனாதிபதி அநுராவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும் அது தனது கடிதத்தில், 13 வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தேசிய இனப்பிரச்சினை மற்றும் இலங்கையின் சிறுபான்மையினர் மத்தியில் பல தசாப்தங்களாக நிலவும் துயரங்களை தீர்ப்பதற்கான அர்ப்பணிப்பை காண்பிப்பதற்கான முதல்படியாகும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

தற்போதுள்ள அரசியலமைப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது இனமத சிறுபான்மையினரின் நம்பிக்கைகளை மேம்படுத்துவதற்கு இன்றியமையாத முன்நிபந்தனை என்பதை நாங்கள் கவனத்தில் கொள்கின்றோம்.


சட்ட சீர்திருத்தம் முன்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## வெளிப்படையான ஆட்சி முதலீடுகளை அதிகரிக்க வழிவகுக்கும்: ஜூலி சங்

இலங்கையில் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்காக ஷீல்ட் நிறுவனம் எடுத்த முடிவு இலங்கையில் அமெரிக்க முதலீட்டை அதிகரிக்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்தியாவை தளமாகக் கொண்ட ஷீல்ட் (SHIELD) நிறுவனத்தின் புதிய சீட்பெல்ட் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



இங்கு மேலும் கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், அமெரிக்கா ஏற்கனவே

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தமிழியல் நூலகத் திறப்புவிழா




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது தமிழியல் சார் ஆய்வுகளை முதன்மைப்படுத்தும் வகையிலமைந்த விசேட நூலகப் பிரிவொன்றை சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தின் முழுமையான நிதிப்பங்களிப்பில் நிறுவியுள்ளது.

தமிழியல் நூலகம் எனப் பெயர் பெறும் இப்பிரிவானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்திற்கும் அப்பால் விரிந்த தளத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்குரியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொன்விழா ஆண்டில் 29.10.2024 அன்று வைபவரீதியாக வாசகர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## ஊடகங்களை கட்டுப்படுத்தும் முயற்சியை ஜனாதிபதி கைவிடவேண்டும்!

ஊடகங்கள் தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்த கருத்துகளுக்காக அவரை கடுமையாக சாடிய சமகி ஜன பலவேகயவின் தலைவர் சஜித் பிரேமதாச, ஊடகங்களை கட்டுப்படுத்தும் முயற்சியில் இருந்து பின்வாங்குமாறு திஸாநாயக்கவிடம் கேட்டுக் கொண்டார்.

''ஊடகங்களுக்கு ஆலோசனை வழங்குவதையும் அடக்குவதையும் நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் நாங்கள் கூற விரும்புகிறோம். ஜனாதிபதி வேட்பாளராக அனுரகுமார திஸாநாயக்க இருந்த போது ஊடகங்கள் பற்றி பேசவில்லை, ஊடக சுதந்திரம், உரிமைகள் மற்றும் பாதுகாப்பு பற்றி பேசினார். ஆனால் இப்போது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஊடகங்களுக்கு ஆலோசனை வழங்க முயற்சிக்கிறார்.

ஊடக சுதந்திரம் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி நாட்டின் ஊடகங்கள்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## உலகில் 3 வல்லாதிக்க சக்திகள் உள்ளன

### அமெரிக்க ஜெனரல்



உலகின் தனிப்பெரும் வல்லாதிக்க சக்தி என்ற நிலையில் தற்போது அமெரிக்கா இல்லை. தற்போது உலகில் மூன்று வல்லரசுகள் உள்ளன, அமெரிக்கா, ரஸ்யா மற்றும் சீனா என அமெரிக்காவின் கூட்டுப்படைகளின் முன்னாள் கட்டளை அதிகாரி மார்க் மில்லே கடந்த செவ்வாய்கிழமை(29) நியூயோர்க்கில் இடம்பெற்ற அமெரிக்க வங்கிகளின் சங்கத்தின் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் தற்போதைய அதிபர் ஜோ பைடன் ஆகியவர்களின் காலப்பகுதியில் மில்லே கட்டளை அதிகாரியாக பணியாற்றியிருந்தார். அவர் கடந்த வருடம் ஓய்வுபெற்றிருந்தார்.


பனிப்போர் காலத்தில் இரண்டு வல்லரசுகள் இருந்தன, பனிப்போரின் முடிவின் பின்னர் அமெரிக்காவே தனி ஒரு வல்லரசாக

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## அமெரிக்க தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெறுவார் – பொருளியல் நிபுணர்

அடுத்த வாரம் அமெரிக்காவில் இடம்பெறவுள்ள அரசதலைவருக்கான தேர்தலில் முன்னாள் அதிபரும் குடியரசுக் கட்சியின் வேட்பாளருமான டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெறுவார் என உலகின் எதிர்கால பொருளாதார நிலமைகளை துல்லியமாக கணிப்பு செய்துவரும் பொருளியல் நிபுணர் கிறிஸ்தோப் பாரோட் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரும், தற்போதைய துணை அரச தலைவருமான கமலா ஹரீஸ் ஒரு விகிதத்திற்கும் குறைவான வாக்கு வித்தியாசத்தில் முன்னியில் உள்ளதாக அண்மையில் நியூயோக்



ரைம்ஸ் தகவல் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரு வேட்பாளர்களுக்கும் இடையில் கடும் போட்டி நிலவி வருகின்றது. வெற்றியீட்டும் விகித வேறுபாடுகளும் மிகவும் குறைவாகவே உள்ளன. வேறுபட்ட

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பிரித்தானியா பிரதமருக்கான ஆதரவில் கடுமையான வீழ்ச்சி

சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற பிரித்தானியா பிரதமர் கியர் ஸ்ராமருக்கான ஆதரவுகள் பிரித்தானியா மக்களி



டம் கடுமையான வீழ்ச்சி கண்டு வருவதாக அண்மையில் இடம்பெற்ற ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் ஆட்சிக்கு வந்த ஸ்ராமருக்கான ஆதரவுகள், முன்னாள் பிரதமர் ரிசி சுனாக்கைவிட குறைந்துள்ளதாக பிரித்தானியாவின் த ரெலிகிராப் பத்திரிகை கடந்த திங்கட்கிழமை(28) வெளியிட்ட தனது

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## வழிபாட்டுத்தலங்களுக்கருகில் இருந்து படையினரை விலக்க முடியாது!



ஆலயங்கள், மத வழிபாட்டுத்தலங்கள் அமைந்துள்ள பகுதிகளில் இருந்து படையினரை விலக்கிக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளியாகும் தகவல்களை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

ஆலயங்களினதும் ஏனைய வழிபாட்டுத்தலங்களினதும் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள படையினரை விலக்கிக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தவறானவை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## இலங்கை, இந்திய மீனவர் விவகாரம்: மனிதாபிமான முறையில் கையாள இரு நாடுகளும் இணக்கம்



மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இரு தரப்பினரதும் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய விடயங்களாக காணப்படுவதால் அவற்றை மனிதாபிமான முறையில் கையாண்டு நிவர்த்தி செய்வதற்கு அதிக முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென இந்திய - இலங்கை தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

மீன்பிடி விவகாரங்கள் குறித்த இந்திய - இலங்கை கூட்டுப் பணிக்குழுவின் ஆறாவது அமர்வு ஒக்டோபர் 29 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

இந்த அமர்வில் கலந்துகொண்டிருந்த இந்திய தூதுக்குழுவுக்கு இந்திய அரசாங்கத்தின் மீன்பிடித் துறை செயலர் டாக்டர் அபிலக்ஷ் லிக்கி தலைமை தாங்கியிருந்த அதேவேளை, மீன்பிடித் துறை, விலங்கு பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சு, வெளியுறவுத் துறை அமைச்சு, தமிழக அரசாங்கம், கடற்படை, கரையோரக் காவல் படை, மத்திய சமுத்திர மீன்வள ஆராய்ச்சி நிலையம் மற்றும் கொழும்பில் உள்ள இந்திய தூதுவராலயம் ஆகியவற்றின் மூத்த அதிகாரிகளும் இணைந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை இலங்கை தூதுக்குழுவுக்கு இலங்கை அரசாங்கத்தின் மீன்பிடி அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம் விக்ரமசிங்க தலைமைதாங்கி யிருந்த அதேவேளை, இலங்கை வெளிவிவகார அமைச்சு, மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், கடற்படை, கரையோரக் காவல் படை மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் சிரேஸ்ட அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த அமர்வின்போது மீனவர்கள் தொடர்பாகவும் மீன்பிடித்துறை குறித்தும் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக பரந்தளவான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இரு தரப்பினரதும் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய விடயங்களாக காணப்படுவதால் அவற்றை மனிதாபிமான முறையில் கையாண்டு நிவர்த்தி செய்வதற்கு அதிக முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

அத்துடன் இரக்கம், ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய அணுகுமுறை மட்டுமே இருதரப்பு மீனவர்களாலும் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகளுக்கு நீடித்த அடித்தளமொன்றினை உருவாக்குமெனவும் அவர்கள் இணங்கியிருந்தனர்.

இதேவேளை, இலங்கையில் தடுத்துவைக்கப் பட்டுள்ள இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் முற்கூட்டியே விடுதலை செய்யுமாறு இந்தியதரப்பினர்இலங்கைஅரசாங்கத்திடம்கோரிக்கை விடுத்திருந்தனர். மேலும், இலங்கையில் இந்திய மீனவர்களும் அவர்களது படகுகளும் நீண்டகாலத்துக்கு தடுத்து வைக்கப்பட்டு அதிகளவான தண்டப்பணம் விதிக்கப்படுகின்றமை அதிகரித்துள்ளமை தொடர்பாகச் சுட்டிக் காட்டியுள்ள இந்திய தரப்பு, மீனவர்கள் விவாகரம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஏற்கனவெ காணப்படுகின்ற புரிந்துணர்வுகள் மற்றும் முறைமைகளைப் பின்பற்றவேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தியிருந்தது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தெற்கு உலக உருவாக்கத்தில் ஈழத்தமிழர் இறைமை மேலும் இழக்கப்படுவதை நீங்கள் தடுக்கும் நாளாக நவம்பர் 14

2024ம் ஆண்டுக்கான நவம்பர் மாதம் தொடங்கியுள்ளது. இந்த முதல் வாரத்தில் ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் உலகிலும் தங்களின் தேசியத் தலைவரின் 70வது அகவை நிறைவை நவம்பர் 26லும் தங்களின் தாயகத்தின் 36வது தேசிய மாவீரர் நாளை நவம்பர் 27லும் முன்னெடுப்பதற்கான பணிகளைத் தொடங்கியுள்ளனர். இப்பணிகளுக்கு இடையில் நவம்பர் 14இல் சிறிலங்காவின் பாராளுமன்றத்துக்கான தேர்தலில் தேசமாக எழுந்து வாக்களித்து தங்களின் இறைமையுடன் கூடிய தாயகத்தில் தங்கிளன் தேசியத்தைப் பேணி தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் பாதுகாப்பான அமைதியுடன் கூடிய வளர்ச்சிகளை அடைவதற்காக நேர்மையுடனும் உண்மையுடனும் போராடக் கூடிய தங்களின் சிறிலங்காப் பாராளுமன்றத்துக்கான உறுப்பினரை நன்கு சிந்தித்துத் தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பில் ஈழத்தமிழர் ஒவ்வொருவரும் உள்ளனர்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 28 உறுப்பினர்களே தமிழர் தாயகப் பகுதிகளுக்கான உறுப்பினர்களாகவும் அதில் 10 உறுப்பினர்கள் தமிழர் தாயகப் பகுதிகளில் வாழும் தமிழரல்லாத மக்களால் தெரிவு செய்யப்படக் கூடிய வகையிலும் மிகுதியான 18 உறுப்பினர்களே தமிழர்களால் தெரிவு செய்யப்படக்கூடிய உறுப்பினர்களாகவும் சிறிலங்காவின் அரசியலமைப்பால் கட்டமைக்கப்பட்டுள்ள நிலையில் சிறிலங்காப் பாராளுமன்றத்தின் சட்டவாக்கத்தில் ஈழத்தமிழர்களால் பங்குபற்ற இயலாத முறைமையைக் கொண்டதாக சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சி முறைமை உள்ளது என்பது வெளிப்படையான உண்மை. அப்படியானால் இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் ஈழத்தமிழர் 2068 பேர் வேட்பாளர்களாக பங்கேற்று என்ன பயன்? என்கின்ற கேள்வி நியாயமானது மட்டுமல்ல நீதியானதும் கூட. ஆயினும் பங்குபற்ற வேண்டிய இரண்டு முக்கிய நடைமுறைத் தேவைகள் உண்டு. ஒன்று தமிழர் தாயகத்தில் வாழும் மக்களின் தப்பிப்பிழைக்கும் பொறிமுறைக்கு இது தேவையாக உள்ளது. அடுத்தது அனைத்துலக அரசியலின் புதிய ஒழுங்குமுறையில் ஈழத்தமிழர்கள் தங்களின் இறைமையை வலுப்படுத்த வாக்குகள் மூலம் அதனை உறுதிப்படுத்தல் அவசியமாகவுள்ளது.

முதலாவது தேவையை எடுத்து நோக்குவோம். மக்களின் நாளாந்த வாழ்வைப் பொறுத்த மட்டில் முதல் முக்கியமான தேவைகளாக உள்ள இருப்பிடம், உணவு, நீர், மருத்துவம் சந்தை கல்வி தொழில் வாய்ப்புக்கள் ஆகியனவற்றக்கான நிதியைப் பிரித்தானிய காலனித்துவத்தால் ஈழத்தமிழர்கள் மேல் திணிக்கப்பட்ட இலங்கை அரசாங்கம் என்ற சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமை மூலமாகவே இன்றும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அவலநிலை உள்ளது. இதனைத் "தப்பி பிழைக்கும் பொறிமுறை"யாகக் கருதி ஈழத்தமிழர்கள் தாயக தேசிய தன்னாட்சியையும் இதனையும் இணைத்து போராடக்கூடிய கூடிய தியாக மனதுள்ளவர்களைத் தெரிவு செய்ய வேண்டிய கடமை ஈழத்தமிழர்களுக்கு உண்டு. வாக்களார்களுக்கும் வேட்பாளர்களுக்கும் இந்த வாக்களிப்பு என்பது சனநாயக வழியில் ஈழத்தமிழர்கள் தங்கள் தேசியப் போராட்டத்தை முன்னெடுக்கும் களம் என்ற உண்மையான உணர்வைப் பெற இந்த மாவீரர் மாதம் மாவீர்களின் அளப்பரிய தியாகங்களை இவர்கள் மனதில் எழவைத்து இவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்பது இலக்கின் எண்ணமாக உள்ளது. அப்பொழுதுதான் தங்களை இனஅழிப்புச் செய்தவர்களாகவும் அதற்கு ஆதரவளித்தவர்களாகவும் உள்ள எந்தச் சிங்கள வேட்பாளருக்கும் ஈழத்தமிழர்கள் வாக்களிக்கக் கூடாது என்ற உறுதி பிறக்கும். அவ்வாறே மக்களை நம்பாது மண்ணை விடுவிக்கும் சத்தி மக்களுடையதே என்பதை மறந்து சிங்கள ஆட்சியாளர்களையும் பிறதேச ஆட்சியாளர்களையும் கொண்டு ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண முயலும் எந்த அரசியல் முட்டாள்களுக்கும் வாக்களிக்காத நிலையும் உறுதியாகும்.

இன்றைய உலகில் அமெரிக்காவை முதன்மைப்படுத்திய ஒருமுனைவாக்க அரசியல், சீனாவின் எழுச்சியால் இருமுனைவாக்க அரசியலாகி பிரேசில் ரஸ்யா இந்தியா சீனா தென்னாபிரிக்கா போன்ற வளரும் பொருளாதாரங்களின் கட்டமைப்பான பிரிக்ஸ் இன் வளர்ச்சி இன்று பிரிக்ஸ் பிளஸ் என முப்பது நாடுகளாக பெருவளர்ச்சி பெறுவதும், சங்காய் கோப்பரேசன் ஓர்கனைசேசன் என்ற சீனா ரஸ்யா இந்தியா உடன் ஆறு யூரேசிய நாடுகளையும் உள்ளடக்கிய சங்காய் ஒத்துழைப்பு அமைப்பு என்பனவும், "பல்கூட்டுச் செலுத்துகை"யாக்கத்தை (Multiplex) இன்றைய உலகின் புதிய அரசியல் முறைமையாக மாற்றியுள்ளது. இதுவே இன்று 'தெற்கு உலகம்' (Global South) என்பது இன்றைய உலகின் புதிய அரசியல் ஒழுங்குமுறையில் அதற்கான தனித்துவத்துடன் திகழ வேண்டும் எனச் சீன அரசுத்தலைவரையும் இந்தியப் பிரதமரையும் ரஸ்யாவில் அக்டோபர் 24 இல் நடைபெற்ற 16வது பிரிக்ஸ் பிளஸ் மாநாட்டில் கைகுலுக்க வைத்தது. இந்தியாவுக்கு தெற்கு உலகம் என்ற கட்டமைப்பினைச் சீனா தன்னை உலகின் புதிய அரசியல் ஒழுங்குமுறையில் முன்னிலைப்படுத்த உதவும் என்ற எண்ணம் உண்டு. இதனால் உலகின் தெற்கில் தெற்காசிய தென்கிழக்காசிய நாடுகளை இணைத்த கட்டமைப்பு ஒன்றினுடாக இந்தியா தனது தெற்காசிய மேலாண்மையை உறுதிப்படுத்த வேண்டிய தேவை இந்தியாவுக்கு இன்று உண்டு. இதே அச்சம் பிரேசிலுக்கும் உண்டு. இரண்டு நாடுகளுமே சீனாவின் பி. ஆர் ஐ என்னும் உலகைத் தரை கடல் பாதைகளால் வளைத்து இணைக்கும் முயற்சிகளுக்கு எதிராகவே ரஸ்யாவில் நின்றன. ஆயினும் இந்திய சீன வர்த்தகர்கள் உடைய அழுத்தம் சிவில் சமுக அழுத்தமாக மாறியதன் விளைவே எங்களுடைய பிரச்சினையை நாங்கள் தீர்ப்போம் என்ற பிரகடனத்தை சீனாவும் இந்தியாவும்வெளிப்படுத்தி நட்பாகக் கைகுலுக்கச் செய்தது. இங்குதான் ஈழத்தமிழர்களும் இந்தத் தேர்தல் மேடையில் தங்களின் வர்த்தகர்களைச் சிவில் அமைப்புக்களை இணைத்து உலகத் தெற்கு என்னும் 45வீதமான உலக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்டமைப்புக்குள் ஈழத்தமிழர்களின் இறைமை மேலும் இழக்கப்படுவதைத் தடுக்கப் பலமாக இறைமைக்காகக் குரல் எழுப்ப வேண்டும் என்று இலக்கு அழைக்கிறது. தேர்தலின் பின்னர் செயற்படுவோம் என்று இருக்காது ஈழத்தமிழர்களின் சிவில் அமைப்புக்களும் பொதுவேட்பாளராக நின்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனும் தேர்தல் மேடையில் அவர் அவர்களின் கடமையைச் செய்ய வேண்டும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

இனபேதம் மதபேதம் மனித சமத்துவமின்மை இலங்கைத் தீவின் சாமானிய மக்களின் சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக விடுதலைக்கான முக்கிய காரணியாக இதுவரைகால அரசியல்வாதிகள் உருவாக்கப்பட்டதெனக் கண்டியிலும் பேசியுள்ள சிறிலங்காவின் இன்றைய அரசத்தலைவர் அநுர குமாரதிசநாயக்கா "இருநாடுகள் கொண்ட தீவு இலங்கை" என்பதை ஏற்று இருதேச இனமக்களும் முஸ்லீம் மலையக குடிமக்களும் அவரவர்களுடைய தனித்துவத்துடன் அதே வேளை இலங்கைத் தீவு அனைவருக்குமான தாயகமாக உள்ளது என்ற அடிப்படையில் சமமான சகோதரத்துவமான சுதந்திரத்துடன் வாழ்ந்து தீவின் பாதுகாப்பை அதன் பொருள்வளத்தை அதன் மனித வலுவை இணைந்து பாதுகாக்கக் கூடியதான முறையில் எல்லோருக்குமான அரசியலமைப்பை உருவாக்கி செயற்பட வேண்டும் என்பது இலக்கின் கருத்து. அத்துடன் இதற்கான உரையாடல் அரசியல்வாதிகளுடன் நடத்தப்படாது மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தம்மை அர்ப்பணிக்கும் செயற்பாட்டாளர்களுடனும் மக்களின் சிவில் அமைப்புக்களுடனும் இதற்கு உதவக் கூடிய கற்றோருடனும் அனுபவமுள்ளவர்களுடனும் நடாத்தப்பட வேண்டும் என்பதையும் இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

**ஆசிரியர்**

# 17ஆம் ஆண்டு நினைவில் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பற்றிய நினைவுப்பகிர்வு



பா.அரியநேத்திரன்

விடுதலைப்புலிகளுடைய அரசியல் பொறுப்பாளராக செயல்பட்ட சு.ப. தமிழ்செல்வன் கடந்த2007,நவம்பர்,02,ல்வான்வெளித்தாக்குதலில் உயிரிழந்தார். இன்று 2024, நவம்பர்,02,ல் அவர் உயிரிழந்து 17 ஆண்டுகள் கடந்து விட்டன.



சு. ப. தமிழ்ச்செல்வன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்தவர். தினேஸ் என்ற இயக்கப் பெயரைக் கொண்டிருந்த இவர் புலிகள் இயக்கத்தில் கீழ் மட்டங்களில் இருந்து வளர்ந்து இறப்பின் போது புலிகளின் தலைமையின் உள்வட்டத்தின் ஒருவராக செயற்பட்டார்.

1987 இல் யாழ். தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளராகவும் 1991 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண மாவட்டசிறப்புத் தளபதியாகவும் செயற்பட்டார். 1993இல் கிளிநொச்சி மாவட்டம் பூநகரியில் இலங்கை இராணுவத் தளம் மீதமான தவளைப் பாய்ச்சல்என்கிற விடுதலைப்புலிகளின் இராணுவ நடவடிக்கையில் போரில் காலில் காயமடைந்ததைத் தொடர்ந்து அரசியற் துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்; 2007 நவம்பர் இலங்கை வான்படையின் தாக்குதலில் கொல்லப்படும் வரை அப்பதவியில் இருந்தார். பல ஆண்டுகளாக விடுதலைப் புலிகளின் பகிரங்க முகமாக செயற்பட்டு இராணுவ இயக்க மாக இருந்த புலிகள் இயக்கத்தில் அரசியல் மாற்றங்களையும் ஏற்படுத்தி வந்தார்.

புலிகளின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்று வந்த இவர் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்குப் பின்னர் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவராகவும் செயற்பட்டு வந்தார். 23 ஆண்டுக் கால இயக்க வாழ்வைக் கொண்ட இவரின் இறப்பு புலிகளால் ஈடு செய்யப்பட முடியாத ஒரு இழப்பாக அப்போது பல அரசியல் ஆய்வாளர்களால் கூறப்பட்டிருந்தது.

தமிழ்ச்செல்வன் யாழ்ப்பாண மாவட்டத்தின் சாவகச்சேரியில் பிறந்தார். இவர் தனது கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில்பயின்றார். 1984 இல் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெற்றார்.

1993 இலிருந்து இறக்கும் வரை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளராகச் செயற்பட்டார். நோர்வே அனுசரணையில் இலங்கை அரசுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றினார். அன்ரன் பாலசிங்கத்தின் மரணத்தைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் அமைப்பின் அதியுயர் அரசியற் தலைவரானார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பிரிகேடியர் தரத்துக்கு அவர் நிலையுயர்த்தப் பட்டுள்ளார்.

இவர் விடுதலைப்புலிகளின் அமைப்பில் 1986, காலப்பகுதியில் இணைந்து பல்வேறு நிலைகளால் பற்றுறுதியுடன் களப்பணிகளில் ஈடுபட்ட வரலாறுகளை நோக்கலாம்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் 4 ஆவது பயிற்சி முகாமில் அவர் பயிற்சியைப்பெற்று தமிழகத்தில் வே. பிரபாகரனின் தனிப்பட்ட இணைப்பாளராக பணியாற்றினார்.

1986 இல் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமிழகத்திலிருந்து ஈழம் வருவதற்கு முன் ஈழத்துக்கு வந்து களநிலைமைகள் பற்றிய தகவல்களை திரட்டி மீளவும் தமிழகம் சென்று திரும்பவும் வே. பிரபாகரனுடன் தாயகம் திரும்பினார். அப்போது அவரின் விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயர் தினேஸ் என்பதாகும்.

தமிழகத்திலிருந்து திரும்பிய அவர், 1987 மேமாதம் யாழ். தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1991 வரை அப்பதவியில் அவர் நீடித்தார். இந்தியப் படைகளுக்கு எதிரான போரில் தென்மராட்சியில் நின்று தாக்குதல் நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார்.

1991 இல் யாழ் மாவட்ட சிறப்புத் தளபதியாக செயற்பட்டார்.

1993 இல் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் என்ற நிலையை அவர் பெற்று கடைசிவரை அந்தப் பொறுப்பில் இருந்தார்.



1994-1995 இல் சந்திரிகா அரசுடனான அமைதிப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளின் அணிக்கு தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார்.

2002 ஆம் ஆண்டு நோர்வே அனுசரணையிலான பேச்சுவார்த்தைக்குழுவில் அன்ரன் பாலசிங்கத்துடன் இருந்து பின்னர் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைமைப்பணியை செய்து வந்தார்.

**அவர் பல தாக்குதல்களில் நேரடியாக பங்கு கொண்ட வரலாறுகளும் அவரிடம் காணலாம்**

- 1987 - 1989 வரை யாழ் தென்மராட்சி பகுதியில் இந்திய இராணுவத்துக்கு எதிரான நேரடித் தாக்குதல்.



- 1991 இல் ஆகாய கடல்வெளி நடவடிக்கை (ஆனையிறவு இலங்கை இராணுவ முகாம் வலிந்த தாக்குதல்) இந்த நடவடிக்கையின் போது நெஞ்சில் காயமடைந்தார்.
- 1992 இல் இலங்கைப் படையினரின் “பல வேகய - 02” எதிர்ச்சமரிலும்.
- தச்சன்காடு இலங்கைப் படைமுகாம் மீதான தாக்குதல்.காரைநகரில் இலங்கைப் படையினர் மீதான தாக்குதல்.
- 1991 இல் மன்னார் சிலாபத்துறை இலங்கைப் படைத்தளம் மீதான தாக்குதலுக்கு தளபதியாக செயல்பட்டார்.
- பூநகரி சிறிலங்காபடைத்தளம் மீதானதவளைப் பாய்ச்சல் நடவடிக்கை, 1993 நடவடிக்கையில் பங்காற்றிய அவர் தன்னுடைய காலில் காயமடைந்தார்.
- ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையில் தென்மராட்சி தனங்கிளப்பு சிறிலங்கா படைத் தளம் அழிப்பு உள்ளிட்ட தென் மராட்சிப்பகுதி மீட்புத்தாக்குதலில் கட்டளைத் தளபதியாக பங்காற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
- 2001ல் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உருவாக்கத்திலும் அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த இவருடைய பங்களிப்பை மறக்கமுடியாது.
- 2004-22 தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகி இராசம்பந்தன் தலைமையில் கிளிநொச்சியில் நடைபெற்ற பல சந்திப்புக்களிலும் தமிழ் செல்வனுடைய ஆலோசனைகள் இருந்து.

இவ்வாறானா ஆளுமையானவராக பணியாற்றி இவர் விமானக்குண்டு வீச்சால் உயிர்நீத்து இன்று 17, வது ஆண்டு கடந்துள்ளது.

• • •

# 1987இன் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் படுகொலைகள்...!

## பகுதி–2

இந்திய இராணுவத்தி னரின் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக 8ஆம் இலக்க வார்டில் இருந்த நோயாளிகள் பலர் இந்த மண்டபத்தில், பாது காப்புக்காகத் தங் கியிருந்தனர்.

அவர்களை நோக்கியும் மேற்கொண்ட தாக்குதலில், பலர் கொல்லப்பட்டபோதும், அவர்களில் சிலர் இறந்து விட்டதாக நடித்து, தரையில் படுத்திருந்ததால் உயிர்தப்பினர். அன்று முழுவதும் வைத்தியசாலையின் மீது தாக்குதல்களை மேற்கொண்ட இந்திய இராணு வத்தினரின் வெறியாட்டம் இன்னும் அடங்காத நிலையில் அன்று இரவு முழுவதும் வைத்திய சாலையை நோக்கிப் பல நூற்றுக் கணக்கான துப்பாக்கிச் சூடுகளும் எறிகணை வீச்சுகளும் இடம்பெற்றன.

மறுநாள் காலை ஒக்டோபர் 22 ஆம் திகதி, 8.30 மணியளவில் டாக்டர் சிவபாதசுந்தரம் மேலும் மூன்று தாதிகளுடன் மருத்துவமனையில் இருந்து வெளியேறும்பொழுது, அவர்கள் தமது கைகளை மேலே தூக்கியவாறு "நாம்



வல்வை ந.அனந்தராஜ்
எழுத்தாளர், முன்னாள் வடமாகாண சபை கல்விப்பணிப்பாளர்

சாதாரண மருத்துவர்களும் தாதிகளும்தான். நாம் சரணடைகிறோம்," எனக் கத்தியபடி சென்றனர். ஆனால் அவர்களை வைத்தியரும்,தாதிகளும் என்று தெரிந்த நிலையிலும், அவர்கள் மீதும்; துப்பாக்கிச்சூடுகள் நடத்தப் பட்டன. இந்தத் தாக்குதலில் விசேட வைத்தியர் சிவபாதசுந்தரம் துடிதுடித்து இரத்தம் தோய்ந்த நிலையில் கொல்லப்பட்டார், அவருடன் சீருடைக ளில் வந்த தாதிகள் மூவரும் கடுமையான காயங்களுக்குள்ளா னார்கள்.

இந்திய இராணுவத்தினரின் தாக்குதல் கள் ஓய்வுக்கு வந்ததும், 22ஆம் திகதி மு.ப 11.00 மணியளவில், இந்திய இராணுவ உயர் அதிகாரி ஒருவர் வைத்தியசாலை வார்டு ஒன்றினுள் நுழைந்தார். அப்போது, அங்கே அச்சத்தினால் பதுங்கியிருந்த பெண் மருத்துவர் ஒருவர், அவர்களுக்கு எதிரில் வெளிப்பட்டார். அவர் இராணுவ அதிகாரிக்கு நிலைமையை விளக்கிய பின்னர் அங்கே மறைந்திருந்த ஏனைய பணியாளர்களையும் கைகளைத் தூக்கியவாறு வெளியேறி வருமாறு கூறினார். அங்கு உயிருடன் தப்பியிருந்த 10 பேர் வெளியேறி வரும்போது, பாதையில் விசேட மருத்துவர் கணேசரத்தினம் இறந்து கிடப்பதைக் கண்டனர். அன்று மாலை இறந்தவர்கள் அனைவரினதும் உடல்கள் சேகரிக்கப்பட்டு ஒரேஇடத்தில் தகனம் செய்யப்பட்டன..

இந்திய இராணுவம் மேற்கொண்ட யாழ். வைத்தியசாலை படுகொலையின் நேரடி சாட்சி ஒருவரின் பதிவில், அமைதிப்படை என் னும் பெயரோடு தமிழர் தாயகத்திற்கு வந்த இந்திய இராணுவம் நடாத்திய கோரத்தாண்டவங்களும் படுகொலைகளும் ஏராளம். அதில் குறிப்பிடத் தக்கதாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

யாழ் போதனா வைத்தியசாலைப் படு கொலை வல்வெட்டித்துறை ஊறணி வைத்தி யாசலைத் தாக்குதல்கள் வல்வைப் படுகொலைகள் கொக்குவில் பிரம்படிப் படுகொலைகள் இந்திய இராணுவத்துடன் சேர்ந்து இயங்கிய ஒட்டுக் குழுக்களினால் மேற்கொள்ளப் பட்ட தமிழ் அறிவுஜீவிகள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிக ளின் படுகொலைகள்.

இவற்றுள் யாழ் போதனா வைத்திய சாலை வளாகத்தில் நிகழ்ந்த படுகொலையானது யுத்த தர்மங்களை மீறிய ஒரு மிலேச்சத்தனமான படுகொலையாகவே இன்றும் பேசப்படுகின் றது. எவை எவை போரில் இருந்து தவிர்க்கப் படவேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனவோ, அந்த இலக்குகளைக் குறி வைத்து இந்திய அரசு கோரதாண்டவம் ஆடியுள்ளது என்று ஆவேசத் துடன் தெரிவித்தார்

இந்திராகாந்தி பிரதம மந்திரியாக இருந்த பொழுது, அமிர்தசரசில் உள்ள சீக்கியர்களின் புனித தலமாக வணங்கப்படும் பொற்கோவில்மீது இந்திய இராணுவத்தினரால் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டபோது,பல சீக்கியத் தீவிரவாதி கள் மட்டுமல்லாது,பொதுமக்களும் பலர் கொல் லப்பட்டனர்.அதனை அடுத்து இந்துக்களுக்கு எதிரான கலவரம் எழுந்ததில் பலஇந்துக்கள் கொல்லப்பட்டனர்.

இந்திய அரசின் இராணுவத்தின் "சென்னை படைப் பிரிவே" (Madras Regiment) பொற்கோயில் மீதான தாக்குதலை மேற்கொண்டது. அந்தத்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# அமைச்சு பதவிக்காக தமிழ்தேசிய அரசியல் உருவாகவில்லை..!

பா.அரியநேத்திரன்

யாழ்ப்பாணத்தில் தியாகி பொன் சிவ குமாரன் 1978,யூன்05, ல் அமைச்சு பதவி கேட்டு நஞ்சருந்தி சாகவில்லை?

யாழ்ப்பாணம் நெல்லியடியில் கரும்புலி மில்லர் 1987,யூலை,05,ல் அமைச்சு பதவி கேட்டு தற்கொடை செய்யவில்லை?

மன்னார் மாலதி 1987,அக்டோபர்,10,ல் அமைச்சு பதவி கேட்டு இந்தியப்படையுடன் மோதி உயிர் நீக்கவில்லை?

யாழ்ப்பாணத்தில் தியாகி திலிபன் 1987, செப்டம்பர்,26, ல் அமைச்சுபதவி கேட்டு உண்ணா நோன்பு இருந்து உயிர் துறக்கவில்லை..?

மட்டக்களப்பில் அன்னை பூபதி 1988, ஏப்ரல்,18, ல் அமைச்சுபதவி கேட்டு உண்ணா நோன்பு இருந்து உயிர் துறக்கவில்லை..?

அமைச்சு பதவிக்கு ஆசைப்பட்டிருந்தால் 2004, தேர்தலில் தெரிவான 22, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களில் கீழ குறிப்பிடப்படும் இவர்கள் கொலை செய் யப்பட்டிருப்பார்களா?

**1. 2005, டிசம்பர்,25,ல் மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட மாமனிதர் ஜோசப்பரராச சிங்கம்,**

**2. 2006, நவம்பர்,10,ல் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட மாமனிதர் நடராசா ரவிராஜ்,**

**3. 2008,மார்ச்,06, ல் ஏ,9, வீதியில் கிளைமோர் வைத்து கொலை செய்யப்பட்ட மாமனிதர் கிட்டினன் சிவனேசன்.**

இவர்கள் அமைச்சு பதவிகளை பெற்று உயிருடன் அல்லவா இருந்திருப்பார்கள்?

ஐம்பதாயிரம் மாவீரர்கள், மூன்று இலட்சம் தமிழ் மக்கள், அமைச்சு பதவிக்காகவா உயிர் நீத்தனர்?

விடுதலைக்காகவும், உரிமைக்காவும், சுதந்திரத்திற்காகவும், இணைந்த வடகிழக்கில் இணைப்பாட்சி(சமஷ்டி தீர்வு) வேண்டியும் கடந்த 1948, தொடக்கம் 2024, வரையும் பல உயிர் தியாகங்களை செய்த இனம் அதற்கான தீர்வு வரும்வரை அதுதான் எமது இலக்கு அதுதான் எமது கொள்கை அதுதான் எமது அரசியல் என்பதை காட்டி முன்கொண்டு செல்வதே தமிழ்த்தேசிய அரசியலாகும்.

அபிவிருத்தியும், அமைச்சு பதவிகளும் எனில் தமிழ்தேசிய அரசியல் கட்சிகள் தேவை யில்லை ஏதாவது ஒரு ஆழும் தரப்பு கட்சியை ஆதரித்து சலுகைகளையும், பதவிகளையும் பெறலாம்.அதற்காக தமிழ்த் தேசிய முகமூடி தேவையில்லை. அதற் காக இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி தேவை யில்லை

# அதிகரித்த வேட்பாளர்களும் வாக்குச் சிதறலும்

துரைசாமி நடராஜா

ஒவ்வொரு சமூகத்தினரும் தங்களது பல்துறை சார் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அரசியல் பிரதிநிதித்துவம் மிகவும் அவசியமாகின்றது. பின்தங்கிய சமூகங்கள் பல முன்னிலைக்கு வருவதற்கு ஆக்கபூர்வமான அரசியல் பிரதிநிதித்துவம் தோள் கொடுத்திருக்கின்றது என்றால் மிகையாகாது. இந்தவகையில் சிறுபான்மை மக்களின் குறிப்பாக மலையக மக்களின் தேவைகள் இன்னும் தீர்த்து வைக்கப்படாத நிலையில் அரசியல் ரீதியான ஆதிக்கம் இத்தகைய சமூகங்களுக்கு மிகவும் அத்தியாவசியமாகின்றது. இந்நிலையில் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை மழுங்கடிக்கும் நோக்கில் திரைமறைவு செயற்பாடுகள் இடம்பெற்று வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதில் ஒரு அம்சமாக தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் சுயேச்சைக் குழுக்கள் அதிகமாக களமிறக்கப் பட்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய நிலைமைகள் வாக்குச் சிதறல்களுக்கு அடிப்படையாக அமைவதோடு அது சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை கேள்விக் குறியாக்கிவிடும் என்பதையும் மறுப்பதற்கில்லை.



இலங்கையின் தேர்தல் வரலாற்றில் பாராளுமன்ற தேர்தல் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. இத்தேர்தலின் ஊடாக தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதில் மக்கள் தொடர்ச்சியாக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இதனடிப்படையில் 1947 இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் டி.எஸ்.சேனநாயக்கா பிரதமராக தெரிவானார். இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 751,432 வாக்குகளைப் பெற்றுக் கொண்ட நிலையில் 42 ஆசனங்களை கைப்பற்றிக் கொண்டது. 1952 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 54 ஆசனங்களையும், 1956 பொதுத்தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி 51 ஆசனங்களையும், 1960 மார்ச் மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 50 ஆசனங்களையும், அதே வருடத்தில் ஜூலை மாதத்தில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 75 ஆசனங்களையும், 1965 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 66 ஆசனங்களையும், 1970 இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 91 ஆசனங்களையும், 1977 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 140 ஆசனங்களையும், 1989 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 110 ஆசனங்களையும், 1994 பொதுத்தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி 91 ஆசனங்களையும், 2000 மாம் ஆண்டு பொதுத்தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி 94 ஆசனங்களையும், 2001 ம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 96 ஆசனங்களையும், 2004 பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 92 ஆசனங்களையும், 2010 பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 127 ஆசனங்களையும், 2015 பொதுத்தேர்தலில் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி 93 ஆசனங்களையும் கைப்பற்றிக் கொண்டன. 2020 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்ற நிலையில் இக்கட்சிக்கு பாராளுமன்றத்தில் 145 ஆசனங்கள் கிடைத்தன. ஐக்கிய மக்கள் சக்தி 54 ஆசனங்களையும், இலங்கை தமிழரசுக் கட்சி 10 ஆசனங்களையும் இத்தேர்தலில் பெற்றுக் கொண்டன.

### நிறைவேற்று அதிகாரம்

இம்முடிவுகளுக்கேற்ப 1952 இல் டட்லி சேனநாயக்கா, 1956 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, 1960 மார்ச் மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் டட்லி சேனநாயக்கா, அதே வருடத்தில் ஜூலை மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க, 1965 இல் டட்லி சேனநாயக்க, 1970 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, 1977 இல் ஜே.ஆர்.ஜயவர்த்தன, 1989 இல் டி.பி.விஜேதுங்க, 1994 இல் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, 2000 இல் ரத்னசிறி விக்கிரமநாயக்க, 2001 இல் ரணில் விக்கிரமசிங்க, 2004 இல் மஹிந்த ராஜபக்ஷ, 2010 இல் தி.மு.ஜயரட்ன, 2015 இல் ரணில் விக்கிரமசிங்க போன்றோர் பிரதமராக தெரிவாகி இருந்தனர். இதேவேளை ஜே.ஆர். ஜயவர்தன, ஆர்.பிரேமதாச, டி.பி.விஜேதுங்க, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோட்டபாய ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகித்துள்ளனர்.



நாட்டின் சமகால தேர்தல்களில் 1977ம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை பின்பற்றப்படுகின்றது. இத்தேர்தல் முறைமையானது நாட்டின் அபிவிருத்திக்கும் ஐக்கியத்துக்கும் குந்தகமாக உள்ளதாக கருத்து வெளிப்பாடுகள் இருந்து வரும் நிலையில் புதிய தேர்தல் முறைமையின் அவசியம் தொடர்பிலும் வலியுறுத்தல்கள் இருந்து வருகின்றமையும் தெரிந்தேயாகும்.

இதேவேளை நாட்டின் 10 ஆவது பாராளுமன்றத்துக்கு 225 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ம் திகதி இடம்பெறவுள்ளது. இத்தேர்தலில் நாடு முழுவதும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 690 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் 74 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் அதிகமாக 64 குழுக்கள் (அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்கள்) போட்டியிடுகின்ற நிலையில் பொலனறுவை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் குறைந்தளவான குழுக்கள் போட்டியிடுகின்றன. இதற்கேற்ப 15 குழுக்கள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்து வரும் நிலையில் அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் உச்சகட்ட பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றன.



இதேவேளை இம்முறை தேர்தலில் அதிகளவான சுயேச்சைக் குழுக்கள் களமிறக்கப் பட்டுள்ளதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக சிறுபான்மை மக்கள் அதிகமாக உள்ள இடங்களில் சுயேச்சைக் குழுக்கள் அதிகமாக களமிறக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகளும் 21 சுயேச்சைக் குழுக்க ளும் போட்டியிடுகின்றன. மட்டக்களப்பு மற்றும் வன்னி மாவட்டங்களில் இருபதுக்கும் அதிகமான சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. இதேவேளை மலையக மாவட்டங்களிலும் சுயேச்சைக் குழுக்களின் அதிகரித்த தன்மையை காணமுடிகின்றது. இம்முறை இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் 8 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 17 அரசியல் கட்சிகளும் 11 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளன. இதற்கமைய 308 வேட்பாளர்கள் இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் களமிறங்குகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் திகாம்பரம், உதயகுமார், இராதாகிருஸ்ணன் ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணி கட்சிகள் சார்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த .

ஜீவன் தொண்டமான், ராமேஷ்வரன், பழனி சக்திவேல் மற்றும் ஐ.தே.க.வில் இருந்து சதானந்தன் திருமுருகன் ஆகி யோர் நுவரெலியா மாவட்டத்தில் களமிறங்கியுள்ளனர். இந்நிலையில் நுவரெலியா மாவட்டத்திற்குட்பட்ட மஸ்கெலியா, வலப்பனை, கொத்மலை, ஹங்குரான்கெத்த ஆகிய தொகுதிகளில் இருந்து 605,292 வாக்காளர்கள் 534 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இந்நிலையில் இரத்தினபுரி மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் நோக்கில் 18 அரசியல் கட்சிகளும் 07 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளன. 11 பாராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு இம்முறை இரத்தினபுரி மாவட்டத்தில் 350 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதேவேளை கண்டி மாவட்டத்தில் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# மேதகுவின் போர் அறம்

1984 ஆகஸ்ட் எட்டாம் தேதி இரவு சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் நடந்த கொடிய வெடி விபத்தை இன்றும் கூட என்னால் மறக்க முடியவில்லை. அது நடந்து 40 ஆண்டுகள் ஆகிவிட்டது. அப்போது நான் 'தினமணி' செய்தியாளன். தமிழீழ விடுதலைப் போராளிகள் குழு ஒன்றின் பிழையால் நடந்த அந்தக் கொடிய வெடிவிபத்தில் பலியானவர்கள் 33 பேர்.

அந்தச் சம்பவத்துக்கு யார் காரணம், அவர்களது நோக்கம் என்ன, அது எப்படி நடந்தது – என்று விவரிப்பதைக் காட்டிலும், கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவிப் பொதுமக்கள் என்பதை நினைவுகூர்வது முக்கியமானது. அவர்களைக் குறிவைத்து வெடிகுண்டு வைக்கப்படவில்லையென்றாலும், கண்மூடிக் கண் திறப்பதற்குள் செத்து மடிந்தவர்கள் அவர்கள்தான்! தாங்கள் எதற்காகச் சாகிறோம் என்பதை அறியாமலேயே இறந்தவர்கள் அவர்கள்.

அந்தச் சம்பவத்தை நினைக்கும் போதெல்லாம், யாழ் குடாவின் திருநெல்வேலி நினைவுக்கு வரும் எனக்கு! திருநெல்வேலியில் சிங்கள ராணுவத்தின் சோதனைச்சாவடி இருந்தது. ராணுவ சோதனைக்கு உட்படாமல், ஒரு புழு பூச்சியால் கூட அதைக் கடந்து போய்விட முடியாது. சோதனைச்சாவடியின் இரண்டு பக்கமும் நீண்ட வரிசையில் தமிழ் மக்கள் காத்திருப்பார்கள். நத்தை மாதிரி நகரும், அந்த வரிசை. ஒவ்வொரு நபரும் திரைச்சீலைகளாலும் தற்காலிகக் கதவுகளாலும் மூடப்பட்டிருக்கும் சோதனையிடும் பகுதிக்குள் போய், ராணுவத்தின் சோதனைக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும். சோதனை முடிந்தபிறகே, மறுபுறத்துக்குப் போக முடியும்.



அது அவர்களது சொந்தத் தாய்மண். சோதனையிடுபவர்கள், அந்த மண்ணுக்கு அந்நியர்களான சிங்கள ராணுவத்தினர். சொந்தத் தாய்மண்ணில் நடமாட அந்நியரின் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. அது, சொந்த மண்ணில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அவமதிப்பு. வெளியிலிருந்து பார்க்க முடியாதபடி அடைக்கப்பட்டிருக்கும் சோதனையிடும் பகுதிக்குள் எப்படியெல்லாம் பரிசோதித்துப் பார்ப்பார்கள் என்பதை வெளியே சொல்லவே முடியாது. அதிலும் குறிப்பாக, சோதனை முடிந்து வெளியே வருகிற தமிழ்ச் சகோதரிகள் பலரின் முகங்களிலும் கடும் தன்னிரக்கம் தவழ்ந்து. (இதைப் பற்றி எழுத்தாளர் தமிழ்நதி ஓர் அற்புதமான சிறுகதை எழுதியிருப்பதாக நினைவு.)

தமிழ்மண்ணின் அவமானச் சின்னமாக விளங்கிய திருநெல்வேலி சோதனைச் சாவடியை எப்படியாவது தகர்த்துவிட வேண்டுமென்று, தமிழீழ விடுதலைப் புலிகள் நினைத்தனர். சோதனைச் சாவடியைச் சுற்றிலும் ராணுவம் குவிக்கப்பட்டிருந்த நிலையில், அதன்மீது தாக்குதல் நடத்துவது அவ்வளவு எளிதல்ல என்கிற நிலை.

ஒருமுறை, அந்த சோதனைச் சாவடி தொடர்பான ரகசியத் தகவல் ஒன்றை, புலிகளின் தளபதிகள் பிரபாகரனின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். யாழ்ப்பாண வணிகர் ஒருவரின் வர்த்தக நிறுவனம், சோதனைச் சாவடிக்கு ஒரு புறமும், அவரது வீடு மறுபுறமும் இருந்தன. அந்த வணிகரின் கார் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்துக்குப் போகும்போது, ராணுவத்தினர் அதைச் சோதனையிடுவதில்லை. அவர்களுக்குள் இருந்த மறைமுக நட்பே அதற்குக் காரணம். சாவடியைச் சுற்றிக் குவிக்கப்பட்டிருந்த ராணுவத்தினர் அந்த வாகனத்தை எந்தச் சோதனைக்கும் உட்படுத்தாமல், சோதனைச் சாவடியைக் கடந்து செல்ல அனுமதிக்கின்றனர் – என்பதுதான் அந்தத் தகவல்.



எந்த சோதனைக்கும் உட்படுத்தப்படாமல் சோதனைச் சாவடியைக் கடக்கும் அந்தக் காரில் வெடிபொருட்களை மறைவாகப் பொருத்தி, சோதனைச்சாவடியைக் கடக்கும்போது அவற்றை வெடிக்க வைக்கலாம் என்கிற யோசனையைத் தளபதிகள் சிலர் முன்வைத்தனர். பிரபாகரனுக்கு அந்த யோசனை கடும் சினத்தை ஏற்படுத்தியது. காரில்வைக்கப்பட்டிருக்கும் வெடிபொருட்களைச் சோதனைச் சாவடியையொட்டி வெடிக்கச் செய்தால், சாவடியில் இருப்பவர்களும் ராணுவத்தினரும் மட்டுமின்றி, சாவடியின் இருபுறமும் வரிசையில் நிற்கிற அப்பாவித் தமிழ் மக்களும், காரில் இருப்பவர்களும் கொல்லப்பட மாட்டார்களா – என்று கோபத்துடன் கேட்டார்அவர். தளபதிகளால் பதில் சொல்ல முடியவில்லை.



புகழேந்தி தங்கராஜ்

எதுதான் பிரபாகரன் என்று கேட்பவர்களுக்கு, இதுதான் பிரபாகரன் – என்று விளக்க, திருநெல்வேலி சம்பவம் மாதிரி ஓராயிரம் சம்பவங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். மீனம்பாக்கம் விமானநிலைய சம்பவத்துக்கு காரணமானவர்களும் பிரபாகரனும் எந்தப் புள்ளியில் வேறுபடுகிறார்கள் என்பதை அதிலிருந்து நாம் புரிந்துகொள்ள முடியும்.

இதில் கொடுமை என்னவென்றால், மீனம்பாக்கம் சம்பவம் நடந்ததும், அதுதொடர்பான பிழையான செய்திகள் பத்திரிகைகளிலும் பொது வெளியிலும் பரப்பப்பட்டன. சம்பவம் நிகழ்ந்த மறு நொடியிலிருந்தே, அது விடுதலைப் புலிகளின் கைவரிசை என்பதைப் போன்ற தோற்றம் உருவாக்கப்பட்டது. எங்கே தவறு நடந்தாலும், யார் பிழைவிட்டாலும், அதற்கான பொறுப்பைப் புலிகளின் தலையில் சுமத்துகிற வேலை எண்பத்து நான்கிலேயே ஆரம்பித்துவிட்டது என்பதை எடுத்துச் சொல்லவே இதைச் சுட்டிக்காட்டுகிறேன். இதுபோன்ற அவதூறுகளைப் புறந்தள்ளி, சொந்தத் தாய்மண்ணின் விடுதலைக்காக உறுதியுடன் போராடும் அமைப்புகளை வரலாற்றின் வழி நெடுகப்பார்க்கமுடிகிறது. அத்தகையஅமைப்புகள் இப்போதும் இருக்கின்றன. விடுதலைக்காகப் போராடும் உண்மையான அமைப்புகளுக்கான தேவை இப்போது மட்டுமல்ல, எப்போதும் இருக்கும்.

சர்வதேச அளவில் விடுதலைக் கனவுடன் இயங்கிய ஆயுதப் போராளிகள் அமைப்புகளில் ஒன்றுதான் விடுதலைப் புலிகளென்றாலும், மற்ற அமைப்புகளிலிருந்து வேறுபட்டு தனித்துவத்துடன் திகழ்கிறார்கள் புலிகள். அது, மென்மையான இலக்குகளைத் (SOFT TARGET) தாக்கக் கூடாது என்கிற அவர்களது போர் அறம்.

விடுதலைப் புலிகளுக்கு முன்பான சாத்வீகப் போராட்டக் காலங்களில் கூட, ஒரு சில எதிர்வினைகளைப் பார்க்க முடிகிறது. இக்கினியாகல-வில் நடந்த சிங்கள வெறியாட்டத்திலும், அதன் தொடர்ச்சியான வேறு சில சம்பவங்களிலும், நூற்றுக்கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதின் பின்விளைவாக, சிங்கள மக்களைத் தமிழர்கள் திருப்பித்தாக்கியதற்கான பதிவுகள் இருக்கின்றன. சொந்த இனம் கொல்லப்பட்டதை அறிந்த கணத்தில் எழுந்த உணர்ச்சிப் பிரவாகத்தால் நிகழ்ந்த தாக்குதல்கள் அவை.

அது, சிங்கள இனத்தவர் பெரும்பான்மையினராக இருந்த இடங்களிலெல்லாம், தமிழ் மக்கள் தாக்கப்பட்ட காலகட்டம். எதிரொலியாக, தமிழர்கள் பெரும்பான்மையினராக இருந்த பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக எதிர்த் தாக்குதல்கள் நிகழ்ந்தன. இத்தகைய எதிர்வினைகள், மொழியாலும் மதத்தாலும் கலாச்சாரத்தாலும் மாறுபட்ட இருவேறு இனங்களுக்கு இடையில் உரசல்களும் விரிசல்களும் நிலவும் பிராந்தியங்களில் இயல்பானவை. அங்கே அடி விழுந்தால் இங்கே இடிவிழும் – என்கிற காட்டுநீதி இரண்டு தரப்புக்கும் பொதுவானதாக ஆகிவிடும்.

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இந்திய தீபகற்பத்தில் இதுதான் நடந்தது. அது, இந்தியா – பாகிஸ்தான் என இந்தத் தீபகற்பம் பிளவுபட்ட சமயம். அங்கிருந்து இங்கும், இங்கிருந்து அங்கும் பல லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். பல நூற்றாண்டுகளாக ஒருவர் மீதொருவர் வைத்திருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையை, பாழாய்ப்போன மத நம்பிக்கை சிதைத்திருந்தது. கண்ணுக்குக் கண் , பல்லுக்குப் பல் – என்கிற வகுப்பு வன்மம் தலைவிரித்தாடியது. இடம்பெயர்ந்து கொண்டிருந்த ஹிந்துக்களும், இஸ்லாமியர்களும், வழிநெடுக பரஸ்பர வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்டனர். இருதரப்பிலும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இருபது லட்சமாக இருக்குமென்கிற கணக்கே உண்மையானதென்று தோன்றுகிறது. இரண்டு லட்சம் என்பது, அந்த மனிதகுலப் பேரழிவைச் சுருக்கிக் காட்டுகிற முயற்சி.

*Weaker sex* என்றே வரலாற்றில் குறிப்பிடப்படுகிற பெண்கள், அதிலும் குறிப்பாக இளம்பெண்கள், அந்த வகுப்பு வன்முறைக்கு எளிதாக இலக்காகினர். இரண்டு தரப்பிலும் இருந்த போக்கிரிகளும் பொறுக்கிகளும், அந்த SOFT TARGET- டை விட்டுவைக்கவில்லை. சீரழிக்கப்பட்ட ஒவ்வொரு ஹிந்துப் பெண்ணுக்கும் பதிலாக பத்து இஸ்லாமியப் பெண்களைச்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# விஜய் - அரசியல் வருகை! எதிர்ப்பும் எதிர்காலமும்!

சட்டவாளர் ஆதி



தமிழ்நாட்டின் தேர்தல் அரசியல் களத்தில் எத்தனையோ நடிகர்கள் கட்சி ஆரம்பித்து உள்ளனர்.

விஜய்யின் கட்சியான தமிழக வெற்றிக் கழகம் அறிவிக்கப்பட்டு கடந்த 27 அக்டோபர் அன்று தனது முதல் மாநாட்டை நடத்தி உள்ளது!

த.வெ.க அறிவிப்பு வந்த போது கூட மைய நீரோட்ட ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் விவாதங்கள் ஏதும் இல்லை என்ற நிலை தான் இருந்தது ஆனால் கட்சியின் முதல் மாநாடு தமிழக அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் அரசியல் கட்சியினரை ஆச்சரியம் அடைய வைத்துள்ளது! காரணம் முதல் மாநாட்டிற்கு கூடிய கூட்டம் இன்றி வேறில்லை. ஏறக்குறைய எட்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்/ரசிகர்கள் கலந்து கொண்டனர். த.வெ.க வின் தலைவர் விஜய்யே இதை எதிர்பார்த்து இருப்பாரா என்பது சந்தேகம் தான்!

விஜய் மாநாட்டிற்கு கடிய கூட்டம் தான் தமிழக அரசியல் கட்சிகளின் வழமையான அரசியல் கணக்குகளை மாற்றி யோசிக்க வைத்துள்ளது!

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்திற்கு பின் மோடியினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் சூனிய நிலையை நன்கு பயன்படுத்தி கொண்டு யாரும் அசைக்க முடியாத இடத்தில் இருந்து வரும் திமுகவிற்கு விஜய்யின் மாநாடு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது. சமூக ஊடகங்களில் திமுகவின் ஆதரவாளர்கள் விஜய்க்கு எதிராக கருத்து யுத்தம் நடத்துவதில் இருந்தும் திருமாவளவனின் நீண்ட அறிக்கையிலிருந்தும் இதை புரிந்து கொள்ள முடியும்!

திமுக விற்கு வலுவான எதிர் தரப்பு இன்மையால் தொடர் வெற்றிகளை மட்டுமே அறுவடை செய்து வந்த திமுக தனது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து யோசிக்க ஆரம்பித்து உள்ளது!

### பாசிசம் எதிர்ப்பு குறித்து விஜய்யின் விமர்சனம்!

விஜய் தனது பேச்சின் ஊடாக பாசிச எதிர்ப்பு குறித்து விமர்சனங்களை வைத்தோடு பாசிச எதிர்ப்பு என்ற முழக்கத்தின் கீழ் தமிழக மக்களை ஆளும் திமுக ஏமாற்றி வருவதாக குற்றம் சாட்டினார்! கூடுதலாக பாஜகவோடு திமுக கள்ள உறவில் இருப்பதாகவும் குற்றம் சாட்டி உள்ளார்! விஜய்யின் இந்த விமர்சனங்கள் பலரால் ஏற்றுக் கொள்ள பட்ட விமர்சனங்கள்!



பாசிச பாஜக என்ற முழக்கத்தினை திமுகவின் வெற்றிக்கான சூத்திரமாக ஆக்கி விட்டார்கள்; மோடியால் இலாபம் அடைந்த ஒரே தரப்பை கூற வேண்டுமானால் ஸ்டாலின் குடும்பத்தை தான் கூற வேண்டும்; அதிமுகவை நிலைகுலைய வைத்து திமுகவின் வெற்றிக்கு மோடி உதவினார்; ஒரு வேளை அதிமுக வலுவான நிலையில் இருந்ததால் ஸ்டாலின் கனவில் மட்டும் தான் முதல்வர் ஆகியிருப்பார்! என்பது சில அரசியல் ஆய்வாளர்கள் கூற்று!



பாஜக வை சித்தாந்த எதிரியாக அடையாளப் படுத்திய விஜய் திமுகவை தனது அரசியல் எதிரியாக அடையாளப்படுத்தி உள்ளார்!

தமிழ்நாட்டு அரசியல் களத்தில் சித்தாந்தமும் அரசியலும் படும் வேதனை சொல்லி மாளாது. புதிதாக விஜய் கிளம்பி உள்ளார்! இவை குறித்து எல்லாம் தமிழக அரசியல் கட்சியினருக்கு அக்கறை கிடையாது; தமிழ்நாட்டு அரசியல் களத்திற்கு இவை தேவையும் இல்லை என்று நீண்ட காலமாக முடிவு செய்து உள்ளனர்.

பயன்பாட்டுவாதமே தமிழக அரசியலில் நீக்கமற நிறைந்து உள்ளன! விஜய்யும் இவ்விடயத்தில் ஒத்துப் போகிறார் என்றே தெரிகிறது!

### திராவிடமும் தமிழ்தேசியம்!

திராவிடமும் தமிழ்தேசியமும் வேறு வேறு அல்ல இரண்டும் ஒன்று தான்; என்று விஜய் கூறி இருப்பது வரவேற்கத் தக்கது!

திராவிடம் எதிர் தமிழ்தேசியம் என்ற நிலைபாட்டால் தமிழகம் இழந்ததே அதிகம்! விஜய் இரண்டையும் சமப்படுத்தி உள்ளமை உண்மையில் பாராட்டுக்குரியது! இந்திய இறைமையை ஏற்றுக்கொண்டு தமிழ் தேசியத்திற்கு எப்படி உதவுவார் என புரியவில்லை! தமிழ்தேசியம் எதிர் இந்திய தேசியம் என்று இருந்த அரசியலை உடைத்து தில்லியின் மனம் குளிர வைத்தவர் சீமான்! திராவிடம் எதிர் தமிழ்தேசியம் என்ற வெகுஜன அரசியலால் ஆதாயம் அடைந்த முதன்மையான தரப்பென்றால் அது புதுதில்லி அதிகார வர்க்கம் தான் முள்ளிவாய்க்காலின் கோரமான முடிவுக்கு இந்தியாவை பழி சுமத்துவதிலிருந்து திராவிடம் எதிர் தமிழ்தேசியம் என்ற கருத்துருக்கள் பாதுகாப்பு வழங்கியது! இருதரப்பும் அறிந்தே தில்லியை பாதுகாத்தனர்! விஜய்யின் வழியும் தனி வழியில்லை என்பதை மாநாட்டு உரையிலிருந்து புரிந்து கொள்ள முடியும்?

தேர்தல் அரசியல் களத்தில் விஜய் ஒரு தவிர்க்க இயலாத சக்தியாக மாறுவார் என்று த.வெ.க வின் முதல் மாநாடு நிருபிக்க தவற வில்லை!

பழ. நெடுமாறனின் தீவிர விசுவாசியாக அறியப்படும் ஊடகவியலாளர் அய்யநாதன் தான் விஜய்யின் பேச்சுக்கு ஸ்கிரிப்ட் எழுதி கொடுத்து உள்ளதாக பரவலாக செய்தி வருகிறது!

ஆளும் திமுகவின் மீதான தமிழக மக்களின் அதிருப்தி மற்றும் எதிர்க்கட்சிகளின் செயல்முடக்கம் என விஜய் பக்கம் பலமா கவே காற்று வீசுகிறது!

விஜய் இதை பயன்படுத்தி கொள்ளவே தக்க நேரத்தில் தனது கட்சி அறிவிப்பை வெளியிட்டு முதல் மாநாட்டையும் நடத்தி முடித்து உள்ளார்!

விஜய்யின் வரவால் முதல் பாதிப்பே சந்தேகமின்றி சீமானுக்கு தான்! சீமானின் வாய் தான் வேலை செய்கிறதே தவிர சீமான் வேலை செய்வதாக தெரியவில்லை!

நாம் தமிழர் கட்சிக்கு ஆதரவாக ஆரம்ப கட்ட காலத்தில் உழைத்தவர்கள் இப்போது யாரும் சீமானோடு இல்லை! தன்னை சுயம்பு வாகவும் எல்லாம் வல்ல ஏக சக்தியாகவும் நினைத்து சீமான் உளறிய உளறல்களை கேட்க சகிக்க வில்லை!



தனது கட்சி ஊழியர்களை கிரீஸ் டப்பாக்கள் என ஏளனம் செய்யும் சீமான் அடுத்த கிரீஸ் டப்பாவாக மாறினாலும் ஆச்சரியப் பட ஏதும் இல்லை!

விஜய்யின் ஊழல் ஒழிப்பு முழக்கம் வழமைபோல பம்மாத்து இந்திய அரசியல் களத்தில் ஊழல் ஒழிப்பு குறித்து பேசாத கட்சிகளே இல்லை! இதற்கு முரணாக அனைத்து கட்சியினர் மீதும் இலஞ்ச ஊழல் புகார்களும் குவிந்தே கிடக்கின்றன! விஜய்யின் ஊழல் ஒழிப்பு குறித்து பெரிதாக பேச ஏதும் இல்லை!

நீண்ட காலமாக தமிழக அரசியல் களம் இரு துருவ அரசியல் இன்மையால் அல்லல் படுகிறது! திமுக வகுத்ததே சட்டம் என்ற நிலை தான் தொடர்கிறது! அதிமுகவோ உட்கட்சி பிரச்சினைகளை சமாளிக்கவே நேரம் போதவில்லை. ஆளும் வர்க்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு சிறந்த தேர்வாக விஜய் இருக்கவே செய்வார்! விஜய்யை விட்டால் தற்போது வேறு தலைவர்களும் இல்லை! இதில் சந்தேகம்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# “நும் நாடு யாதென்றால் தமிழ்நாடு என்றல்”

பேராசிரியர் ஆ. அருள் இனியன்




‘முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரே’ என்கிறது தொல்காப்பியம். நிலம் தான் முதல் கருப்பொருள் என்கிறார் தொல்காப்பியர். ஏன்?

உயிருக்கு நிலமே ஆதி. ஈறில்லா தொலைவில் நீண்டு, எப்பக்கமும் சூழ்ந்தும் விரிந்தும் பரந்தும் நிற்கும் வெளியில் நடு நாயகமாக நின்று, இப்பிரபஞ்ச இயக்கத்தை அசைபோடும் நம் உயிராற்றல் தோன்றிட ஆதியும் அந்தமுமாக நின்றது நிலமே!

இந்த நிலத்தில் தான், பல ஆயிரக் கணக்கான கோடி ஆண்டுகள் தவமாய், தவமிருந்து ஒரு செல் உயிரியில் தோன்றி, பல செல் மிருகமாய் எழுவதற்கும், ஓரறிவு உயிரில் தொடங்கி, ஆறறிவு மாமனிதனாக நிமிர்ந்து நிற்பதற்கும், தன்னைத்தான் காண, கணக்கிட, கொண்டாடி தீர்க்க உயிருக்கு வாய்ப்பைக் கொடுத்தது.

நிலமும் காலமும் கலந்து உருவானதே நாம் காணும் அனைத்தும். இந்த பேருண்மையை உளபூர்வமாக உணரும்போதுதான் நிலம் எவ்வளவு முக்கியம் என்று நம்மால் உணர முடியும்.






நிலத்தின் மீதான பற்று என்பது மண்ணுலகில் தோன்றிய எல்லா ஜீவராசிகளுக்கும் உரியதே. இதில் எந்தவொரு மாற்றுக் கருத்தையும் உங்களால் உருவாக்க முடியாது. ஏனெனில் அதுவே உயிரின் இயல்பு.

அந்த உயிர் இயல்பின் காரணமாக மனிதர்களுக்குள் தோன்றியது தான் நாட்டுப் பற்று. நாடு என்பது வெறும் நிலத்தை மட்டும் குறிப்பன அல்ல. நாடு என்பது நிலம், அந்த நிலத்தில் தோன்றிய இனம், அந்த இனத்தின் தொன்மம் எல்லாவற்றையும் காக்க போராடும் எண்ணம் தான் நாட்டின் மீதான பற்று. நாட்டுப் பற்றின் மூலம் ‘நிலம்’ தான். அதனால் தான் ஆதி மனிதன் தொடங்கி, நவீன கால மனிதன் வரை அனைவரும் நாட்டுப் பற்றுக்கு முக்கியத்துவம் தருகின்றனர்.

இந்த உயிர் இயல்பில் இருந்து முழுதாக ஒருவர் அந்நியப்பட்டு வாழ்ந்துவிட இயலாது. இந்த இயல்பு தான் நிலம் பிடிக்கும் வேட்கையின் தொடக்கம். இந்த இயல்புதான் நாடு, தேசம் என்ற கூறுகள் உருவாக காரணம். அப்படி உருவான நாடுகளை தக்கவைக்க நடக்கும் போராட்டம் தான் ‘மனிதகுல வரலாறு’.

வரலாறு என்பது காகிதத்தில் எழுதப்பட்ட வெற்று வரிகள் அல்ல. அவை அனைத்தும் ஏதோவொரு நிலத்தின் மீதான அத்துமீறலும், அதை காக்க, மீட்க வெவ்வேறு இனங்களுக்கு இடையே நடந்த போர் கதைகளும் தான்.

இந்த உண்மைகள் வழியாக கூர்ந்து நோக்கினால், எம் இனத்திற்கு என்று ஒரு நிலம் இருந்து இருக்கும் என்பதும், அதனை மீட்க, காக்க, தலைமுறை தலைமுறையாக எமது இனத்தின் மூத்தோர் செய்த போர்தான் எங்கள் இனத்தின் வரலாறு என்பதையும் நாங்கள் உணர்கிறோம்.

இன்றும் கூட, நாங்கள் நடை பிணங்களாக வாழவில்லை, ஓர் வீரமிக்க இனமாகதான் எம் நிலத்தில் வாழ்கிறோம் என்பதற்கும், எங்கள் தாய் நிலத்திற்காக இன்றுவரை போராடுகிறோம் என்பதற்கும் சமகால வரலாற்று சாட்சியாக நிற்பது எமது ஈழ விடுதலை போராட்டமே!

தனி ஈழம் அமைந்தால் தான் எம் இனம் இம்மண்ணில் வாழ முடியுமா? தமிழருக்கு என்று ஓர் இறையாண்மை உள்ள தனி தேசம் அடைந்தால் மட்டுமே இந்த இனம் நீடூழி வாழ முடியுமா? என்று கேள்வி எழும் எனில், எமது பதில் ‘ இல்லை ’ என்பதாகவே இருக்கும். நாடு அடைவதைவிட மேலான ஒன்று உண்டெனில், அது நாடு அடைவதற்கான யுத்தத்தில் உறுதியோடும் உயிர்ப்போடும் இருப்பது தான்.



நமக்கான நாடு அடையும் போராட்டமே நம்மை இந்த பூமியில் இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் உயிர்ப்போடு வாழ வைக்கும் ஒரே வழி.




இந்த உண்மைகளை எல்லாம் உணர, பேச, எழுத கொண்டாடி தீர்க்கவே ‘தமிழ்நாடு நாள்’ நமக்கு வந்து இருக்கிறது.

உலகம் முழுவதும் பரவி வாழும் எமது தாய்த் தமிழ் சொந்தங்களே...

இந்த நந்நாளில் சபதம் எடுங்கள்...
நமக்கென ஒரு நாட்டைக் கட்டி எழுப்ப சபதம் எடுங்கள்..

வெறும் 50 ஆயிரம், 1 லட்சம் மக்கள் தொகை கொண்ட இனங்கள் எல்லாம், தமக்கான இறையாண்மை உள்ள அரசை நிறுவி, நிம்மதியாக இந்த பூமியில் தனித்து வாழும் போது, உலகின் மூத்த தொல்குடி இனம், 8 கோடிக்கும் அதிகமான மக்கள், 135 நாடுகளில் பரவி வாழும் இனம், தனக்கென்று இறையாண்மை பெற்று வாழ முடியாதா?

விடுதலை என்ற சொல்லைத் தவிர்த்து வேறு எதுவும் இனி நம் காதில் கேட்கக் கூடாது... சுதந்திரம் என்ற சொல்லைத் தவிர்த்து வேறு எதுவும் நம் உதடுகள் உச்சரிக்க கூடாது...

தமிழ்நாடு தமிழர் நாடாகும் நாள் எந்நாளோ? அதுவே உலகத் தமிழர்களின் நன்நாள் என்போமாக...!

அனைவருக்கும் தமிழ் நாடு நாள் வாழ்த்துக்கள்...

• • •

## குடியரசுக்கட்சி வாக்காளர்களைக் கவர்ந்திழுக்க

# கமலா ஹரிஸ் மேற்கொள்ளும் முயற்சி வெற்றிபெறுமா?



தமிழில்: **ஜெயந்திரன்**

அமெரிக்காவின் அதிபர் தேர்தல் அண்மித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் குடியரசுக் கட்சியின் வாக்காளர்களை கவர்ந்திழுப்பதில் கமலா ஹரிஸ் துரிதமாக ஈடுபட்டிருக்கிறார். அங்கும் இங்குமாக மாறக்கூடிய மாநிலங்களான பென்சில்வேனியா, மிச்சிகன், விஸ்கொன்சின் போன்ற மாநிலங்களில், மேனாள் குடியரசுக் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினராக இருந்த லிஸ் ஷேனி கமலா ஹரிசுடன் பயணஞ் செய்து வந்தார். அதே நேரம் தற்போது அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் மகளான பார்பரா கமலா ஹரிசுடன் பயணம் செய்துவருகிறார்.

"எனக்கு ஆதரவு தரும் குடியரசுக் கட்சி யின் உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அல்லது சில கணங்களுக்கு முன் மேடையில் என்னோடு கூட இருந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது நான் மேற்கொள்ளும் முடிவுகளுக்குத் துணை புரியக்கூடிய வர்த்தக சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவர்களது கருத்துகளை செவிமடுக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன்" என்று ஒக்ரோபர் 16ம் திகதி குடியரசுக்கட்சியின் காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் தான் மேற்கொண்ட நிகழ்வுக்குப் பின்னர் வொக்ஸ் *(Fox News)* செய்தித் தாபனத்துக்கு வழங்கிய செவ்வியில் கமலா ஹரிஸ் தெரிவித்தார்.

மேனாள் துணை அதிபர் டிக் ஷேனி, மேனாள் காங்கிரஸ் உறுப்பினர் அடம் கின்ஸிங்கர், காலஞ்சென்ற செனட்டர் ஜோண் மக்கெய்னின் மகன் ஜிம் உள்ளிட்ட குடியரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் கமலா ஹரிசுக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறான போக்கை ஊக்குவிக்கும் பொருட்டு, "ஹரிசை ஆதரிக்கும் குடியரசுக்கட்சியி னர்" என்ற குழுவைக்கூட கமலா ஹரிஸ் தரப்பினர் உருவாக்கியிருக்கிறார்கள்.




இவ்வாறு குடியரசுக்கட்சியைச் சேர்ந்த வாக்காளர்களை கமலா ஹரிஸ் தேடிச்சென்ற பொழுதிலும், அவர் எதிர்பார்க்கும் முடிவை, குடியரசுக்கட்சியினர் கொடுப்பதற்கான வாய்ப்பு கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. அடிமட்ட மக்களை நோக்கும் போது, அங்கே கட்சிகளுக்கிடையே காணப்படும் இடைவெளி அதிகமானதாகும். முக்கிய பிரமுகர்கள் சிலர் கமலா ஹரிசுக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ள போதிலும், கமலா ஹரிசுக்கு ஆதரவு வழங்க குடியரசுக் கட்சியிலிருந்து பலர் முன்வருவார்கள் என எதிர்பார்க்க முடியாது. குடியரசுக் கட்சியினரின் வாக்குகளை எதிர்பார்க்கும் ஹரிசின் முயற்சி, சனநாயகக் கட்சி வாக்காளர்களின் வாக்குகளை அவர் இழக்கும் நிலைக்கு இட்டுச்செல்லலாம்.

ஒக்ரோபர் 25 வெளியிடப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பில், 4 வீதமான குடியரசுக் கட்சி வாக்காளர்கள் மட்டுமே தாம் கமலா ஹரிசுக்கு வாக்களிக்க இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதேயளவு வீதமான சனநாயகக் கட்சியைச் சேர்ந்த வாக்காளர்கள் தாம் குடியரசுக்கட்சி வேட்பாளரான டொனால்ட் ட்ரம்புக்கு வாக்களிக்கவிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னொரு வகையில் கூறுவதாயின், ட்ரம்புக்கு வாக்களிக்க முடிவு செய்துள்ள சனநாயக்கட்சியைச் சேர்ந்த வீதமான குடியரசுக்கட்சியினரே கமலா ஹரிசுக்கும் வாக் களிக்க முடிவுசெய்திருக்கிறார்கள். இதன் காரண மாக "மில்லியன் கணக்கிலானோர் கமலா ஹரிசுக்கு வாக்களிக்க இருக்கிறார்கள்" என்ற செய்தியின் உண்மைத்தன்மை கேள்விக்குள்ளாக்க ப்பட்டிருக்கிறது.



வாக்குகள் அங்குமிங்குமாக ஊசலாடும் மாநிலங்களில் உள்ள வாக்காளர்களை தன் பக்கம் திருப்பவே கமலா ஹரிஸ் முயற்சி செய்கிறார் என்ற வாதம் வைக்கப்படக்கூடும். அப்படியிருந்தாற் கூட அந்த எண்ணிக்கையில் பெரிய மாற்றம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நியூயோர்க் ரைம்ஸ் நாளிதழ் நடத்திய சியெனா கருத்துக்கணிப்பின் படி, அரிஸோனா மாநிலத்தில் உள்ள 7 வீதமான குடியரசுக்கட்சி வாக்காளர்களை ஹரிஸ் தன் பக்கம் கவர்ந்திழுக்கும் நிலையில், 6 வீதமான சனநாயகக்கட்சியினர், ட்ரம்புக்கு ஆதரவளிக்கிறார்கள். பென்சில்வேனி யாவைப் பொறுத்தவரையில் இந்த எண்ணிக்கை முறையே, 12 வீதமும் 10 வீதமுமாகும். நெவாடா மாநிலத்தில் கமலா ஹரிஸ் 6 வீதமான குடியரசுக்கட்சியினரின் வாக்குகளைப் பெறும் அதே நேரம், ட்ரம்ப் 10 வீதமான சனநாயகக் கட்சி வாக்குகளைப் பெறுகிறார். இந்தக் கருத்துக் கணிப்புகள் அனைத்திலும் மூன்றிலிருந்து நாலு வீதம் வரை மாறுபடும் வாய்ப்பு இருக்கிறது.



தங்களது முடிவை மாற்றக்கூடிய குடிய ரசுக்கட்சியினரின் பின்னால், ஹரிஸ் ஓடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், முற்போக்குக் கொள்கையைக் கொண்ட பல வாக்காளர்களை அவர் அந்நியப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. பியூ ஆய்வு மையத்தின் கருத்துப் படி, சனநாயக்கட்சியின் அண்ணளவாக 12 வீதத்தை சனநாயகத் தளம் கொண்டிருக்கிறது. 2016ம் ஆண்டில் சனநாயக தேர்தல் போட்டிகளில் முற்போக்குவாதிகளில் முக்கியமானவரான பேணி சாண்டர்சுக்கு *(Bernie Sanders)* சென்ற மில்லியன்கள் எண்ணிக்கையான வாக்குகளைக் கருத்திற்கொள்ளும் போது, இந்த எண்ணிக்கை இன்னும் பெரிதாக இருக்கலாம் என நம்பப் படுகிறது.

வலது பக்கத்தை நோக்கிச் செல்லும் கமலா ஹரிசின் செயற்பாட்டை, முற்போக்குவாதிகள் சாதகமாகப் பார்க்கவில்லை. எல்லை சம்பந்தமாக இரண்டு கட்சிகளும் இணைந்து கடுமையான ஒரு அணுகுமுறையை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற நோக்குடன் கமலா ஹரிஸ் முன்வைக்கும் சட்டத்தை குடியேற்றத்தை ஆதரிப்பவர்கள் சாதகமாகப் பார்க்கவில்லை. அதே போல, இஸ் ரேலை கண்மூடித்தனமாக ஆதரிக்கும் கமலா ஹரிசின் அணுகுமுறை அமைதியையும் மனித உரிமைகளையும் ஆதரிப்பவர்களுக்கு எதிரான ஒன்றாகவே இருக்கிறது. 2020ம் ஆண்டில் வேட்பாளராகப் போட்டியிட்ட போது, அனை வருக்கும் சுகாதாரசேவை என்ற கோஷத்தை அவர் முன்னெடுத்திருந்தார். தற்போது அந்த முன் னெடுப்பை ஹரிஸ் கைவிட்டிருக்கிறார்.

இடதுசாரிக்கொள்கையைக் கொண்ட முற்போக்குவாதிகளின் அரசியல் நிலைப்பாட் டைப் பொறுத்தவரையில், அவர்கள் ட்ரம்ப்பின் பக்கம் திரும்பப் போவதில்லை. ஆனால் ஒரு மூன்றாம் நபருக்கு வாக்களிக்கலாம் அல்லது வாக்களிப்பதைத் தவிர்த்து தமது இல்லங்களில் தங்கிவிடலாம். போட்டி அதிகமாகவுள்ள மாநிலங்களில் கமலா ஹரிசை இது அதிகமாகப் பாதிக்கும்.



இவ்வாறாகப் பார்க்கும் போது, குடியரசுக் கட்சியினர் பின்னால் செல்வது விவேகமான செயற்பாடாக இருக்கப்போவதில்லை. வரலாறு இதனையே நிரூபிக்கிறது. 2016ம் ஆண்டில் கூட சனநாயகக்கட்சியினர் குடியரசுக்கட்சியின் பின்னால் அதிகமாகச் சென்றார்கள். மேற்குப் பென்சில்வேனியாவில் நாங்கள் ஒவ்வொரு நீலக்கொலர் சனநாயக வாக்காளருக்கு ஈடாக

தொடர்ச்சி 13ஆம் பக்கம்



# மேற்குலகத்தின் நவீன போர் முறையை ஈரான் எப்படி முறியடித்தது?

வேல்ஸில் இருந்து அருஸ்

ஈரான் மீது இஸ்ரேல் கடந்த மாதம் 26 ஆம் நாள் நடத்தியதாக்குதலுக்குபதிலடி கொடுப்பதற்கு ஈரான் தயாராகி வருவதாகவும், அதற்கு அமைவாக ஈரான் தனது பலிஸ்ரிக் ஏவுகணைகளை நகர்த்தி வருவதாகவும் மேற்குலக நாடுகளின் ஊடகங்கள் வெள்ளிக்கிழமை(1) தகவல் வெளியிட்டுள்ளன.

அதேசமயம், இஸ்ரேல் மீண்டும் ஈரானை தாக்கும் சாத்தியங்கள் உள்ளதாக ஈரானிய ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டுள்ளன. அதாவது மத்திய கிழக்கில் இடம்பெற்றுவரும் மோதல்கள் மேலும் மேலும் மோசமாகி வரப்போவதைத் தான் இது காண்பிக்கின்றது.

இந்த நிலையில் ஈரான் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்கள் வெற்றியழித்துள்ளதா என்ற கேள்விகள் எழுந்துள்ளன. ஈரானின் வான் பாதுகாப்பு றேடார்கள் மற்றும் ஏவுகணைத் தொகுதிகளை முற்றாக அழித்துவிட்டதாக இஸ்ரேலிய அரச தரப்பின் தகவல்களை ஆதாரமாக காட்டி மேற்குலக ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டு வருகின்றன.




100 இற்கு மேற்பட்ட இஸ்ரேலின் எப்-16, எப்-15 மற்றும் எப்-35 ரக விமானங்கள் ஈராக் மற்றும் ஜோர்தானின் வான்பரப்பின் மேலாக பறந்தவாறு நூற்றுக்கு மேற்பட்ட ஏவுகணைகளை ஏவியதாகவும் அவற்றில் பலவற்றை ஈரானின் வான் எதிர்ப்பு ஏவுகணைகள் தாக்கி அழித்தபோதும் சில இலக்குகளை தாக்கியதாகவும், அந்த இலக்குகளில் ஈரானின் 3 எஸ்-300 ரக ஏவுகணைத் தொகுதிகளும், றேடார்களும் அழிக்கப்பட்டதாகவும் *The Wall Street Journal* தெரிவித்துள்ளது.

ரஸ்யாவிடம் இருந்து பெறப்பட்ட நான்கு எஸ்-300 ஏவுகணைத் தொகுதிகளில் ஒன்று ஏற்கனவே அழிக்கப்பட்டு விட்டதாகவும், மீதம் இருந்த 3 இல் ஒன்று ஈரானின் தலைநகர் தெஹிரான் விமானநிலையத்தின் பாதுகாப்புக்கு நிறுத்தி வைத்திருக்கப்பட்டதாகவும், ஏனைய இரண்டும் எரிசக்தி நிலையங்களை பாதுகாப்பதற்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் அது தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் கூறுவது உண்மை என்றால் ஈரானிடம் நவீன வான் பாதுகாப்பு ஏவுகணைகள் இல்லை என்பதே அர்த்தம் எனவே ஈரானின் வான் பரப்புக்குள் இஸ்ரேலிய விமானங்கள் சுலபமாக சென்று தாக்க முடியும். ஆனால் கள நிலமை அவ்வாறானதாக இல்லை.



ஈரானின் பதில்தாக்குதலை எண்ணி தற்போதும் மேற்குலக நாடுகள் அஞ்சுவதாகவே தெரிகின்றது. எனவே தான் பிரித்தானியா பிரதமரும், அமெரிக்க அதிபரும் ஈரான் பதில்தாக்குதலை மேற்கொள்ளக்கூடாது என கோரிக்கை விடுத்துள்ளனர்.

உண்மையில் இஸ்ரேலின் தாக்குதல் வெற்றியழித்துள்ளதா என்றால், தோல்வி என்பதே அதற்கான விடை. ஏனெனில் மேற்குலக ஊடகங்கள் கூறுவது போல ஈரானின் எஸ்-300 ஏவுகணைத் தொகுதிகள் அழிக்கப்பட்டிருந்தால் அதில் உள்ள ஏவுகணைகளின் வெடிப்பதிர்வுகள் அந்த பிராந்தியத்தை உலுக்கியிருக்கும். மேலும் அங்குள்ள மக்களில் பலருக்கு அடுத்த நாள் காலை பணிக்கு செல்லும் போது பத்திரிகைகளைப் பார்த்து தான் இஸ்ரேல் தாக்கியதான செய்தியே தெரியும்.

இஸ்ரேலின் ஏவுகணைகளில் சில ஈரானின் எதிர்த்தாக்குதலில் இருந்து தப்பி ஈரானில் வீழ்ந்துள்ளன. எனவே தான் 4 படையினர் கொல்லப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது. ஆனால் பாரிய சேதங்கள் ஏற்பட்டதற்கான சான்றுகள் குறைவாகவே உள்ளன.



கடந்த ஏப்பிரல் 14 ஆம் நாள் மற்றும் ஒக்டோபர் 1ஆம் நாள் ஈரான் இஸ்ரேலை தாக்கியது போன்ற காணொளிகளை இஸ்ரேலின் தாக்குதலின் போது காணவில்லை. அதற்கு காரணம் இஸ்ரேலின் விமானங்கள் ஏவிய ஏவுகணைகளை 100 மைல்களுக்கு அப்பால் வைத்து ஈரானின் ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணைகள் முறியடித்து விட்டதாக படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது எப்படி சாத்தியமானது என்ற கேள்விக்கான பதில்களையும் அவர்கள் அளித்துள்ளனர்.



ரஸ்யாவின் S-300PMU-2 என்ற ஏவுகணைத் தொகுதிகளை ஈரன் 2016 ஆம் ஆண்டு கொள்வனவு செய்திருந்தது. 2004 ஆம் ஆண்டு பாவனைக்கு வந்த புதிய தொழில்நுட்பம் கொண்ட ஏவுகணைத் தொகுதிகள் அவை. 16 நகர்த்தக்கூடிய ஏவுகணை ஏவு தொகுதிகளும் அவற்றுடன் வழங்கப்பட்டிருந்தது. மேலும் இலக்குகளை கண்டறியும் 96L6E வகை றேடார்கள், தாக்குதலை வழிநடத்தும் 30N6E2 வகை றேடார்கள் மற்றும் களமுனையை ஒருங்கிணைக்கும் 64N6E2 வகை றேடார்களையும் ஈரான் பெற்றிருந்தது.

எஸ்-300 ஏவுகணைகளுக்கான தகவல் ஒருங்கி ணைப்பை ரஸ்யாவின் Rezonans-NE வகை றேடார்கள் வழங்கிவருகின்றன. இந்த ராடார்கள் ஸ்ரெல்த் தொழில்நுட்பம் கொண்ட ஐந்தாம் தலைமுறை விமானங்களையும் கண்காணிக்கும் சக்தி கொண்டது.

தனது பொருளாதார நெருக்கடிகளை சமாளிப்பதற்காக சீனாவுக்கு விற்பனை செய்வதற்காக ரஸ்யாவினால் புதிதாக வடிவமைக்கப்பட்டதே S-300PMU-2 ஏவுகணைத் தொகுதி. அதன் பின்னர் அது அல்ஜீரியா, அசர்பைஜான் மற்றும் வியட்னாம் ஆகிய நாடுகளுக்கும் அதனை விற்பனை செய்திருந்தது. இந்த ஏவுகணைத் தொகுதி குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட தூரவீச்சுக் கொண்ட பல அடுக்கு வான் பாதுகாப்பை வழங்கும் சக்தி கொண்டது. மேலும் அதன் 48N6E2 வகை ஏவுகணைகள் 200 கி.மீ தூரவீச்சுக் கொண்டவை, அது மட்டுமல்லாது கைப்சொனிக்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## அதிகரித்த வேட் ... தொடர்ச்சி ...

22 அரசியல் கட்சிகளினதும் 12 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதற்கேற்ப இம்மாவட்டத்தில் 12 ஆசனங்களுக்காக 510 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளதாக மாவட்ட செயலாளரும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான சந்தன தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

### அரசியல் பின்னடைவு

மலையகம் உள்ளிட்ட தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் சுயேச்சைக் குழுக்கள் இவ்வாறாக அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையானது வாக்குச் சிதறல்களுக்கு வித்திடுவதாக அமையும் என்பதே உண்மையாகும். இதனால் சிறுபான்மை சமூகத்தினரின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் மழுங்கடிப்பிற்கு உள்ளாகும் அபாயநிலை மேலெழுந்துள்ளது. இது இம்மக்களின் அரசியல் பின்னடைவிற்கு உந்துசக்தியாக அமைவதோடு மேலும் பல தாக்க விளைவுகளையும் ஏற்படுத்தும்.

இதேவேளை கடந்த கால தேர்தல்களில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையில் காணப்படும் கடினத் தன்மை வாக்குகள் நிராகரிக்கப்படுவதற்கு வித்திட்டுள்ளதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர். பாராளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மாகாண சபை தேர்தல், ஜனாதிபதி தேர்தல் அனைத்திலும் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் தாக்கம் அதிகமாகவே காணப்படுகின்றது. குறிப்பாக 2020ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 16,263,885 ஆகவிருந்த நிலையில் 12,343,302 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. இவற்றுள் செல்லுபடியான வாககுகளின் எண்ணிக்கை 11,598,929 ஆகவிருந்த நிலையில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 744,373 ஆகவிருந்தது. அரசாங்க உத்தியோகத்தர்களின் தபால் மூல வாக்குகள் கூட நிராகரிக்கப்பிற்கு உள்ளாகியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஒரு கோடியே 36 இலட்சத்து 19 ஆயிரத்து 916 பேர் வாக்களித்திருந்தனர். இவற்றுள் மூன்று இலட்சத்து 300 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையில் மலையக மக்களின் வாக்குகளும் அதிகளவில் உள்ளடங்குகின்றன. இத்தகைய நிலை காரணமாகவும் மலையக மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் வீழ்ச்சியடையும் அபாய நிலை மேலெழுந்துள்ளது.

கண்டி, பதுளை, நுவரெலியா உள்ளிட்ட பல இடங்களில் இம்முறை தமிழ் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக் கொள்வதற்கு பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. 1994 இல் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட எஸ்.இராஜரட்ணம் முதல் தடவையாக பாராளுமன்றத்துக்கு தெரிவாகி இருந்தார். அதன் பின்னர் இடம்பெற்ற பொதுத்தேர்தல்களில் கண்டி மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவம் கேள்விக்குறியாகி இருந்தது. எனினும் 2015 மற்றும் 2020 ம் ஆண்டுகளில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் வேலு குமார் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். இந்நிலையில் கண்டி மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவம் இம்முறை மீண்டும் தக்க வைக்கப்படுமா என்ற கேள்விக்குறி இப்போது மேலெழுந்துள்ளது. மலையக மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இன்னும் அதிகமுள்ளன. குடியிருப்பு, கல்வி, தொழில்வாய்ப்பு, பொருளாதாரம், சுகாதாரம், காணியுரிமை எனப்பலவும் இதில் உள்ளடங்கும். இவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் அரசியல் பிரதிநிதித்துவத்தின் வகிபாகம் அதிகமாகும்.

### பிரதமரின் நிலைப்பாடு

இதனிடையே பெருந்தோட்ட மக்கள் இந்த நாட்டின் முழுமையான பிரஜைகள். ஏனைய தரப்பினருக்கு கிடைக்கும் உரிமைகள் அவர்களுக்கும் முழுமையாக கிடைக்க வேண்டும். அதனை உறுதிப்படுத்த வேண்டும். பெருந்தோட்ட மக்கள் அரசியலில் நேரடியாக பங்குபற்ற முடியாத நிலைமை காணப்படுகின்றது. எந்த பிரச்சினைகளுக்கும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளை நாடும் நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலைமை மாற்றம் பெறவேண்டும். சுதந்திரமாக தமது அரசியல் பிரதிநிதித்துவத்தை தெரிவு செய்ய வேண்டும். பெருந்தோட்ட மக்கள் நேரடியாக அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதையே எதிர்பார்த்துள்ளோம். காணி மற்றும் சம்பள பிரச்சினைக்கு கொள்கை அடிப்படையில் தீர்வினைப் பெற்றுக் கொடுப்போம். இவ்விரு விடயங்களுடன் மாத்திரம் பெருந்தோட்ட மக்களை வரையறுக்க முடியாது. பெருந்தோட்ட மக்கள் மத்தியில் புதிய அரசியல் தலைமைகள் தோற்றம் பெற வேண்டும். அதற்கு நாங்கள் வாய்ப்பளிப்போம் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பெருந்தோட்ட மக்களுக்கு புது இரத்தம் பாய்ச்சி இருக்கின்றார்.

• • •

## உலகில் 3 ... தொடர்ச்சி ...

திகழ்ந்தது. குறுகிய காலத்தில் அமெரிக்கா தனிப்பெரும் வல்ல ரசாக திகழ்ந்தது. ஆனால் தற்போது நிலமை மாறிவிட்டது.

இப்போது பல்துருவ உலக ஒழுங்கு உருவாகியுள்ளது. சீனா வின் வளர்ச்சி மற்றும் படைத்துறை அபிவிருத்தி தொடர்பில் அமெரிக்கா அதிக கவனம் செலுத்தவேண்டும். ஏனெனில் அது தனியாகவே உலகில் அமெரிக்காவுக்கு சவால்விடும் நிலைக்கு வளர்ந்துள்ளது.

ரஸ்யாவிடம் அதிக அணுவாயுதங்கள் உள்ளன. 1945 ஆம் ஆண்டிற்கு பின்னர் ரஸ்யா மிகப்பெரும் தரைப் போரில் ஈடுபட்டுள்ளது. உலகம் மிகவும் சிக்கலான நிலைக்குள் சென்றுள்ளது. அமெரிக்காவின் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி என்ற பாதை தோல்வி கண்டால், உலகில் வல்லமை கொண்டவர்கள் தான் தப்பிப் பிழைக்கும் சாத்தியங்கள் உள்ளன. என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி என்ற கருத்தை தனது ஆதிக்கத்தை தக்கவைப்பதற்காக அமெரிக்கா தவறாக பயன்படுத்தி வருவதாக ரஸ்யா குற்றம் சுமத்தி வருகின்றது.

## மேற்குலகத்தின் ... தொடர்ச்சி ...

வேகம் கொண்ட 250 கி.மீ தூரவீச்சுள்ள 48N6DM வகை ஏவுகணைகளையும் அதன் மூலம் ஏவ முடியும்.

இந்த ஏவுகணைகளை ரஸ்யாவிடம் இருந்து ஈரான் 2020 ஆம் ஆண்டு பெற்றிருக்கலாம் என நம்பப்படுகின்றது. ஒலியை விட 8 மடங்கு வேகத்தில் பறக்கும் இலக்கை 250 கி.மீ தூரத்திற்கு அப்பால் வைத்து இந்த ஏவுகணை மூலம் சீனா சுட்டு வீழ்த்தியிருந்தது. இஸ்ரேலின் வான்படை ஏவிய ஏவுகணைகள் இந்த வேகத்தை விட குறைவானவை. அது மட்டுமல்லாது ஈரானிடம் எஸ்-200டி, எஸ்-200எஸ் ஆகிய ஏவுகணைகள் உள்ளன. 1990களில் வடிவமைக்கப்பட்ட இந்த ஏவுகணைகள் விமானத்தில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள் போன்ற சிறிய ஏவுகணைகளை தடுக்காதுபோனாலும், பலிஸ்ரிக் ஏவுகணைகளை தக்கும் சக்தி கொண்டவை. விமானங்களையும் சுட்டு வீழ்த்தக்கூடியவை.

எஸ்-200 ஏவுகணை மூலமே 2018 ஆம் ஆண்டு இஸ்ரேலின் எப்-16 விமானத்தை சிரியா சுட்டு வீழ்த்தியிருந்தது. எனவேதான் இஸ்ரேலின் விமானங்கள் ஈரானின் வான்பரப்புக்கு வெளியில் நின்று தாக்குதல்களை மேற்கொண்டிருந்தன.

அது மட்டுமல்லாது ரஸ்யா மற்றும் வடகொரியா ஆகிய நாடுகளின் தொழில்நுட்ப உதவிகளுடன் தயாரிக்கப்பட்ட சொந்த தயாரிப்பான Bavar 373 எனப்படும் வான் பாதுகாப்பு ஏவுகணைத் தொகுதிகளும் ஈரானிடம் உள்ளன. அதன் Sayyad 4B வகை ஏவுகணைகள் இலக்குகளை 300 கி.மீ தூரத்திற்கு அப்பால் வைத்து அழிக்கும் சக்தி கொண்டவை. எனவேதான் இஸ்ரேலின் ஏவுகணைகளில் பல ஈரானின் வான் பரப்புக்குள் நுளைவதற்கு முன்னரே அழிக்கப்பட்டுள்ளன. உக்ரைன் போரில் ஈரானின் சகீட்-136 ரக தாக்குதல் விமானங்கள் உலகின் கவனத்தை கவர்ந்தது போல தற்போது இஸ்ரேலின் தாக்குதலை முறியடிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட இந்த ஏவுகணைகள் உலகின் கவனத்தை கவர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஒரே சமயத்தில் 200 இலக்குகளை தாக்கும் சக்தி கொண்டது இந்த ஏவுகணைத் தொகுதி.

மேலும் 2019 ஆம் ஆண்டு பாவ னைக்கு கொண்டுவரப்பட்ட Khordad 15வகை ஏவுகணைகளும், ரஸ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட Tor-M1 வகை ஏவுகணைகளும் உள்ளன. இந்த ஏவுகணைகளும் இணைந்த தாக்குதலுக்கு பயன்படுத்தப் பட்டிருக்கலாம்.

ஈரானிடம் வானில் இருந்து தாக்குதல் நடத்தும் எப்-16, எஸ்யூ34 போன்ற நவீன விமானங்களோ அல்லது வானைப் பாதுகாக்கும் எஸ்யூ35 ரக விமானங்களோ இல்லை. ரஸ்யாவிடம் எஸ்யூ35 விமானங்களை வாங்கப்போவதாக கூறினாலும் இன்னும் அது நிறைவேறவில்லை.

ஆனால் தரையில் இருந்து இயங்கும் வான் பாதுகாப்பு பொறி முறைகள் மூலம் அது தனது நாட்டையும், படைக் கட்டமைப்பையும் மேற்குலகத்தின் அதி நவீன படைக்கலங்களின் தாக்குதல்களில் இருந்து ஈரான் பாதுகாத்துவருவது என்பது மிகவும் முக்கிய வளர்ச்சியாகும்.

## பிரித்தானியா ... தொடர்ச்சி ...

ஆய்வில் தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் வரலாற்றில் பிரதமருக்கான ஆதரவுகள் கடுமையாக வீழ்ச்சி கண்டது இதுவே முதல் முறையாகும். 1,012 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில் +11 புள்ளிகளாக இருந்த முன்னைய ஆதரவுகள் தற்போது எதிர்மறையாக -39 புள்ளிகளாக வீழ்ச்சி கண்டுள்ளது. அதாவது 49 புள்ளிகள் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

நல்லாட்சி, தேசிய பாதுகாப்பு, எல்லைகளைப் பாதுகாத்தல் மற்றும் பொருளாதார உறுதித் தன்மை என்ற வாக்குறுதிகளை முன்வைத்து ஆட்சியில் அமர்ந்த ஸ்ராமருக்கான ஆதரவுகள் நான்கு மாதங்களில் கடுமையாக வீழ்ச்சி கண்டுள்ளது. +60 புள்ளிகளாக இருந்த தொழிற்கட்சியின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயரின் ஆதரவுகள் 3 வருடத்தின் பின்னர் தான் எதிர்மறையாக மாறியிருந்தது ஆனால் ஸ்ராமருக்கான ஆதரவுகள் சில மாதங்களில் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த புதன்கிழமை(30) வெளியிடப்பட்ட முதலாவது வரவுசெலவுத்திட்டமும் அதிக வரிகளை மக்கள் மீது சுமத்தியுள்ளது. வரவு செலவுத்திட்டம் தொடர்பில் கவலை அடைந்துள்ளதாக 68விகித மக்கள் தெரிவித்துள்ளனர். மேலும் பிரித்தானியா ஒரு மோசமான நிலைக்கு செல்வதாக 70 விகிதமான மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

### குடியரசுக்கட்சி ... தொடர்ச்சி ...

பிலடெல்பியாவின் நகர்ப்புறங்களில் இரண்டு மிதவாதக் குடியரசுக்கட்சி வாக்காளரை நாம் எடுப்போம் என்று சனநாயக் கட்சியைச் சார்ந்த செனடடர் சக் ஷூ மர் தெரிவித்தார். இதே போன்ற நிகழ்வு ஒஹையோ, இலைநோய், விஸ்கொன்சின் போன்ற மாநிலங்களிலும் நடைபெறலாம்.

ஷூ மரின் கருத்து தவறானது என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. சனநாயக் கட்சி வேட்பாளரான ஹலறி றோடாம் கிளின்ரன் மிகவும் அவமானகரமான முறையில் ட்ரம்பிடம் தோற்றார். ஷூ மர் குறிப்பிட்ட மாநிலங்களில், இலைநோய் மாநிலத்தில் மட்டும் ஹிலறி கிளின்ரன் வெற்றிபெற்றார். அது அவர் பிறந்த இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

நெப்ராஸ்க்கா போன்ற கடும் சிவப்பு மாநிலங்களைக் குறிவைத்து தனது பரப்புரையை மேனாள் ராஜாங்கச் செயலரான ஹிலறி முன்னெடுத்த அதே நேரம், அவரது நீலச்சுவர் தகர்ந்து வீழ்ந்தது. 1984ம் ஆண்டு, வோல்ற்றர் மொண்டேல் தோல்வியடைந்த பின்னர், மிச்சிகனில் எந்தவொரு சனநாயகக்கட்சி வேட்பாளரும் தோல்வியடையவில்லை. அமெரிக்க அதிபர் தேர்தல் வரலாற்றில் அதுவே மிகவும் மோசமான தோல்வியாகப் பார்க்கப்படுகிறது. தனது சொந்த மாநிலமான மினசோட்டா மாநிலத்தை மட்டுமே அவரால் வெற்றிகொள்ள முடிந்தது. தான் வெற்றிகொள்ள முடியாத வாக்காளர்களில் கவனத்தைச் செலுத்தாமல், தான் வெற்றிகொள்ளக்கூடிய வாக்காளர்களில் கவனத்தைச் செலுத்தினால் வெற்றிபெறும் வாய்ப்பு கமலா ஹரிசுக்கு அதிகமாக இருக்கும். அதாவது எந்தப் பக்கமும் சாராமல் இருப்பவர்களும் முற்போக்குவாதிகளும் அவர்களுக்குள்ளேயுள்ள முக்கிய குழுக்களும் ஆகும்.

எந்தப் பக்கமும் சாயாமல் இருப்பவர்கள் மத்தியில் 8.5 புள்ளிகளால் ட்ரம்ப் முன்னணியில் நிற்பதாக அற்லஸ் இன்ரெல் அண்மையில் மேற்கொண்ட கருத்துக்கணிப்பு சுட்டிக்காட்டியது. இவர்களைப் பொறுத்தவரையில் பொருண்மியமும் குற்றங்களும் தான் முக்கிய விடயங்களாகும். தீவிர வலதுசாரிக்கொள்கையைக் கொண்டவர்களின் நடுவிலும், புதிய பழமைவாதிகளின் நடுவிலும் ஆதரவைத் தேடுவதைத் தவிர்த்து இவர்களை இலகுவாகவே கமலா ஹரிஸ் கவர்ந்திழுத்திருக்கலாம்.

மேலும் எந்தப் பக்கமும் சாராதிருப்பவர்கள் மிதவாதக் கொள்கையையே அதிகமாக நாடுவார்கள். திருமண சமத்துவம், சுகாதார சேவை விரிவாக்கம், மரிவானாவைச் சட்டரீதியாக்குதல் போன்ற விடயங்களையே இவர்கள் அதிகமாக ஆதரிப்பார்கள். முற்போக்குவாதிகளும் இந்த விடயங்களையே ஆதரிப்பார்கள்.

தனது வலதுசாரிக் கொள்கைகளைக் கைவிட்டு அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாகக் குறிப்பாக இஸ்ரேல் தொடர்பாக தனது கொள்கையை மாற்றியமைப்பதன் மூலம் கமலா ஹரிஸ் முற்போக்குவாதிகளை அதிகமாக ஈர்த்திருக்கலாம். தன்னுடன் இணைந்து போட்டியிடும் ரிம் வோல்ற்சைப் போலவே கமலா ஹரிசும் முற்றுமுழுதாக இஸ்ரேலின் பக்கம் நிற்கிறார். இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள், ஆக்கிரமிப்பு, பயங்கரவாதம் போன்ற செயற்பாடுகளுக்கு பைடன் நிர்வாகமும் பொறுப்புச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறது. இவ்வாறான பைடன் நிர்வாகத்திடமிருந்து விலகிச் செல்ல கமலா ஹரிஸ் ஆயத்தமாகவில்லை. விமானக் குண்டுவீச்சுகள், பட்டினி போடுதல், மற்றும் அப்பாவிப் பொதுமக்களை வெளியேற்றுதல் போன்ற செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் இஸ்ரேலுடன்

இணைந்த வெள்ளை மாளிகையின் செயற்பாடு மேலும் அதிகரித்திருக்கிறது. ஒரு குறுங்கால போர்நிறுத்தத்தையும், இஸ்ரேலிய - அமெரிக்க பணயக்கைதிகளை விடுவிக்க கடைசி நேரத்தில் பைடன் மேற்கொள்ளும் முயற்சி, கமலா ஹரிஸ் தொடர்பான வாக்காளர்களின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை.

இவ்வாறான ஒரு ஆக்கிரமிப்புத் தோரணை, அரபு மற்றும் முஸ்லீம் அமெரிக்கர்களை அந்நியப்படுத்தியிருக்கிறது. 2022 இல் 1.5 வீதமான பதிவு செய்யப்பட்ட வாக்காளர் இந்தக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஆனால் நாடு முழுவதும் பரந்து வாழ்வதால் அவர்களுக்கு ஒரு விகிதாசாரமற்ற பலம் ஒன்று இருக்கிறது. தேர்தலுக்காக சனநாயகக்கட்சி முன்னெடுத்த மாநாடுகளில் அவர்கள் மேற்கொண்ட ஈடுபடா இயக்கம் இதனையே வெளிப்படுத்திநிற்கிறது.

மிச்சிகன் மாநிலத்தில் எல்லோரது கவனமும் குவிந்திருக்கும் நிலையில், ஜோர்ஜியா, அரிசோனா போன்ற மாநிலங்களில் முஸ்லீம்கள் முக்கிய வாக்காளர் ஆவர். 2020 இல் பைடன் பெற்றுக்கொண்ட மிக அரும்பொட்டான வெற்றியை நோக்கும் போது, அவர்களது எண்ணிக்கை மிக அதிகமாகும். பைடன் இலகுவாக வெற்றியடைந்த பென்சில்வேனியா, விஸ்கொன்சின் போன்ற மாநிலங்களில் முஸ்லீம் அமெரிக்கர்கள் மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவர்கள். முஸ்லீம் அல்லாத அரபு வாக்காளர்கள் இதற்குள் அடங்கவில்லை.

வழமை போலவே, அமெரிக்காவின் இந்த இரண்டு கட்சி நிலையில் மோசமான இரண்டு விடயங்களுக்குள் தெரிவை மேற்கொள்ள வாக்காளர் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஒப்பீட்டளவில் குறைவான தீமை என்ற விடயம் மட்டும் வெற்றியைப் பெறுவதற்கு கமலா ஹரிசுக்குப் போதுமானதல்ல.

நவம்பர் மாதம் அண்மித்திருக்கும் இச் சூழலில் தனக்கு அதிகமாகத் தேவைப்படுபவர்களை விட்டுவிட்டு, தன்னை விரும்பாதவர்கள் பின்னால் கமலா ஹரிஸ் ஓடிக்கொண்டிருக்கிறார். இதற்குள் அரபுநாட்டவர்களும் முஸ்லீம்கள் மட்டும் அடங்கவில்லை. காஸாவில் மேற்கொள்ளப்படும் இனவழிப்பின் காரணமாக அதிக மக்கள் தொகையைக் கொண்டவர்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள். ஒரு முற்போக்கான அரசியலை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவ்வாறான கொள்கைகளை கமலா ஹரிஸ் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை என்பது மட்டுமன்றி அதன் காரணமாக தேர்தலில் அதன் விளைவுகளை அவர் சந்திப்பார்.

**நன்றி: அல்ஜஸீரா**

### பயங்கரவாத ... தொடர்ச்சி ...

மொழியப்பட்ட சட்டங்கள் மனித உரிமைதராதரங்களிற்கு ஏற்பகாணப்படுவதை உறுதி செய்யவும், சிறுபான்மையினத்தவர்களை பாதிக்கும் தவறான பயன்பாட்டிலிருந்து பாதுகாக்கவும், சீர்திருத்தங்களை நாங்கள் கோருகின்றோம்.

பயங்கரவாத தடைச்சட்டம் இணைய வழிபாதுகாப்பு சட்டம் ஆகியவற்றை நீக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம், கடந்த காலங்களில் வன்முறைகள் நிகழ்ந்ததை ஏற்றுக் கொள்ளுதல் - இலங்கை முழுவதிலும் உள்ள பாதிக்கப்பட்டவர்கள் உண்மை நீதியை தேடி மேற்கொண்டுள்ள நிலையில் அவர்களின் வேண்டுகோளிற்கு தீர்வை காண்பதற்கான நேர்மையான முயற்சிகள் அவசியம்.

பொறுப்புக்கூறல் தொடர்பான சுயாதீனமான நடவடிக்கைகளை ஆரம்பித்தல் ,ஆழமாக வேரூன்றியுள்ள தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் கலாசாரத்திற்கு முடிவை காண்பதற்காக உண்மையை தெரிவிக்கும் முயற்சிகளையும் முன்னெடுக்கவேண்டும்'' என்றும் மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

### அமெரிக்க ... தொடர்ச்சி ...

கருத்துக்கணிப்புகள், பங்குச்சந்தை நிலவரம், பொருளாதார நிலைமைகள், பந்தையங்கள், எதிர்வுகூறல்கள் மற்றும் தேர்தல் மாதிரிகளை ஆய்வு செய்ததன் மூலம் தான் இந்த முடிவுக்கு வந்துள்ளதாக பாரோட் தெரிவித்துள்ளார்.

ட்ரம்பின் வெற்றி காங்கிரஸ் சபையில் பிளவுகளை ஏற்படுத்தும், அது வரிக் குறைப்பு, வர்த்தகக் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிவிவகாரச் கொள்கைகளில் அதிக மாற்றங்களை ஏற்படுத்தும். ஹரீஸ் வெற்றி பெற்றால் பொருளாதாரத்தில் அதிக மாற்றம் ஏற்படாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். அதேசமயம், எதிர்வரும் வாரம் இடம்பெறும் தேர்தலில் ஹரீஸ் வெற்றிபெறுவார் என அலன் லிற்ச்மன் தெரிவித்துள்ளார். இவர் 1984 ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவில் இடம்பெற்ற 10 அரச தலைவர் தேர்தல்களில் 9 தேர்தல்களின் முடிவுகளை சரியாக கணிப்பிட்டவர்.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

## மேதகுவின்... தொடர்ச்சி ...

சீரழிப்பதென்கிற கொள்கை இந்தப் புறத்திலும், அதற்கு இணையான கொள்கை அந்தப் புறத்திலும் இருந்தன. இப்படியொரு காட்டுமிராண்டித்தனத்தின் விளைவாக இரு தரப்பிலும் பாலியல் வன்முறைக்கு உள்ளானோர், முறைப்படி புகார் செய்கிற சூழ்நிலையும் அப்போது இல்லை. ஆயிரமாயிரம் அப்பாவிப் பெண்களின் கண்ணீரோடு கரைந்துவிட்டன அந்தத் துயரக் கதைகள்.

அப்படியொரு கொடூரமான காலகட்டத்தில், பாலியல் வன்முறைக்கு இலக்கான தங்கள் கிராமப் பெண்களுடன் காந்தியை வந்து சந்தித்த கிராமவாசிகளிடம் காந்தி பேசிய தொனி, முற்றிலும் வேறுபட்டிருந்தது. அதை நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தீர்களா – என்று கோபத்தோடு கேட்டார் காந்தி. உங்கள் உயிரைக் கொடுத்தாவது இந்தச் சகோதரிகளைக் காப்பாற்றியிருக்க வேண்டாமா – என்கிற காந்தியின் கோபம், அவரது அகிம்சைத் தத்துவத்திலிருந்து முற்றிலும் முரண்பட்டிருந்தது. அது ஒரு மகாத்மாவின் குரலல்ல... பொய்மைக் கலப்பில்லாத ஒரு மெய்யான மனிதனின் குரல். உயிரைக் கொடுத்தாவது – என்கிற அந்த மனிதனின் வார்த்தைகளுக்கு, “அந்த வகுப்பு வெறியர்களை நீங்கள் தாக்கியிருக்க வேண்டும்.... அவர்களுடன் உயிரைக் கொடுத்து மோதியிருக்க வேண்டும்” என்பதன்றி வேறென்ன அர்த்தம்!

அந்த சந்தர்ப்பத்தில் மட்டுமல்ல, மும்பையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், 1942 ஆகஸ்ட் எட்டாம் தேதி நள்ளிரவில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பார்த்து ‘இந்தியாவை விட்டு வெளியேறு’ (Quit India) என்று உரத்த குரலில் முழங்கியபோதும், காந்தியின் குரலில் சீற்றம் இருந்தது. பொதுவாகவே மெதுவான குரலில் பேசுகிறவர் அவர். அதற்கு மாறாக, அந்த நள்ளிரவில் அவரது குரல் ஓங்கி ஒலித்தது. ‘முடிந்தால் இன்று இரவே வெளியேறு’ என்று அந்தக் குரல் கோபத்துடன் உத்தரவிட்டது. அதற்கும் ஒருபடி மேலே சென்று, தன்னுடைய தொண்டர்களைப் பார்த்து DO OR DIE (ஹிந்தியில் Karo ya Maro) என்று கட்டளையிடுகிற அளவுக்குச் ஒலித்தது, அந்த 72 வயது கிழட்டுச் சிங்கத்தின் குரல்.

காந்தியைப் போலவே விடுதலைக் கனவில் எந்த சமரசமும் செய்துகொள்ளாத நிஜமான போராளியாவும், மெய்யான மனிதனாகவும் திகழ்ந்த பிரபாகரனும், காந்தி சொன்னதைத்தான் செய்தான். DO OR DIE – செய் அல்லது செத்து மடி – என்பதை வார்த்தை வடிவில் உச்சரிக்காமல், ‘செய்வோம் அல்லது செத்துமடிவோம்’ என்று எதிரிகளை எச்சரித்தன, பிரபாகரனும் பிரபாகரனின் தோழர்களும் அணிந்திருந்த சயனைட் குப்பிகள்.

சர்வதேச அரங்கில் ஆயுதம் தாங்கிப் போராடும் பல்வேறு விடுதலை இயக்கங்களுக்கு இல்லாத ஒழுக்கமும் கட்டுப்பாடும் புலிகளிடம் இருந்த அரிதினும் அரிதான குணங்கள். இலங்கை கப்பற்படையின் சாகரவர்தனா கப்பலைத் தாக்கி, அதன் கேப்டனைச் சிறைப்பிடித்தனர் கடற்புலிகள். கேப்டனைத் தேடி கொழும்பிலிருந்து வந்த அவனது காதலி, புலிகள் எவ்வளவு கண்ணியமாக நடந்துகொண்டனர் என்பதை பின்னாட்களில் விவரித்தாள். அதை இப்போது நினைத்துப் பார்த்தாலும், விடுதலைப் புலிகள் பிறந்த இனத்தில் நாமும் பிறந்திருக்கிறோம் – என்கிற பெருமை நம்மைத் தொற்றிக் கொள்ளும்.

எவ்வளவோ தமிழ்ச் சகோதரிகள் இலங்கைப் படையினரால் சீரழிக்கப்பட்ட போதும், ஒரே ஒரு சிங்களச் சகோதரியின் மீது கூட புலிகளின் விரல் பட்டுவிடக் கூடாது என்கிற கட்டுப்பாட்டுடன் இயங்கிய பேராண்மை மிக்க இயக்கம், தமிழீழ விடுதலைப் புலிகள். அதனால்தான், *LTTE was viewd as a disciplined and militarized group with a leader of significant military and organizational skills* – என்கிறது வரலாறு.

இதையெல்லாம் மிஞ்சுகிற விதத்தில் விடுதலைப் புலிகளின் பிறிதோர் பண்பு திகழ்ந்தது. அதைப் பற்றியும் பேசியாக வேண்டும்....

• • •

## விஜய் - அரசியல்... தொடர்ச்சி ...

வேண்டாம்!

சாதியையும் தமிழ்நாட்டு தேர்தல் அரசியலையும் பிரித்து பார்க்க முடியாது என்ற எதார்த்ததை நன்கு புரிந்து வைத்திருக்கிறார் விஜய்! ஏற்கனவே தமிழ்நாட்டில் இருக்கும் முக்கியமான சாதிகளை தனது மாநாட்டில் மூலமாக அடையாளப்படுத்தி கௌரவித்தது உள்ளார்! சமூகநீதி பெண்ணியம், தீண்டாமை ஒழிப்பு, மாநில தன்னாட்சி, தமிழ் மொழி உரிமை,நீட் தேர்வு எதிர்ப்பு, என சகல தரப்பினரும் ஏற்கும் வண்ணம் தனது முதல் உரையை நிகழ்த்தி உள்ளார்!

மாநாட்டில்

பாஜக மற்றும் திமுகவை சாடிய விஜய் காங்கிரஸ், அதிமுக, திமுக கூட்டணி கட்சிகள் என எதையும் சாடாமல் ஒதுங்கி க் கொண்டதோடு கூட்டணி ஆட்சிக்கான அழைப்பையும் விடுத்துள்ளார்!

### யாழ்ப்பாணத்து மருமகன் என்று அழைக்கப்படும் விஜய்

உலகத் தமிழர்கள் குறித்து வெளிப்படையாக பேசிய போதும் ஈழத் தமிழர்கள் குறித்து ஏதும் பேசாமல் தவிர்த்து உள்ளார்! விஜய்யை விமர்சனம் செய்யும் நடுநிலையாளர்கள் பலர் திமுகவின் பக்கம் நின்று கொண்டு விமர்சித்து வருவது எப்படி பட்ட பலனைத் தரும் என்று புரியவில்லை!

### திமுக ஆதரவு விமர்சனங்களை தமிழக மக்கள் ரசிக்கப் போவதில்லை என்றே தெரிகிறது!

விஜய், பாஜகவோ சீமானோ அல்ல இவ்விருவரின் வளர்ச்சியை கட்டுக்குள் வைத்திருக்க முடிந்தது போல விஜய்யை கட்டுக்குள் வைத்திருக்க முடியாது ஆளும் திமுக மற்றும் பாஜகவிற்கு பெரும் சேதத்தை ஏற்படுத்த முனைந்து அதில் வெற்றிபெறுவாரா? என்றே தற்போதைய நிலையில் கூற முடியாது; காலம் என்ன புதிர் போட்டுள்ளது என்பது போகப் போகத் தான் தெரியும்!

கேஸ்ட் நியூட்ரல்(caste neutral) தலைவர்களையே தமிழ் நாடு முதல்வராக தேர்வு செய்து உள்ளமை குறிப்பிடத்தக்கது ; விஜய்யும் தான் ஒரு கேஸ்ட் நீயுட்ரல் என்றே நிருபிக்க முயல்கிறார்; விஜய் இவ்விடயத்தில் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகமாவே உள்ளது!

தமிழ்நாடு எத்தனையோ அரசியல் தலைவர்களை பார்த்து உள்ளது! வழமைக்கு மாறாக விஜய்புத்தம்புதியஅரசியல்வரவு அவ்வளவு தான்!

• • •

## ஊடகங்களை ... தொடர்ச்சி ...

ஜனாதிபதி யிடமோ அல்லது எந்த அரசியல் வாதியிடமிருந்தும் ஆலோசனை பெறத் தேவையில்லை என்று நான் நினைக்கிறேன். ஒரு ஜனநாயக நாட்டின் தூணாக இருக்கும் ஊடக சுதந்திரத்தை நாம் பாதுகாக்க வேண்டும்.

ஊடக நெறிமுறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும் மற்றும் பாதுகாக்கப்பட வேண்டும், ஆனால் அது ஊடகங்களால் வரையப்பட்ட ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும். ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ ஆலோசனை வழங்குவது அல்லது சட்டங்களைக் கொண்டுவருவது ஊடக சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் ஆபத்தானது’’

## இலங்கை, இந்திய ... தொடர்ச்சி ...

இந்தியக் கடற்படை மற்றும் கரையோரக் காவல் படை அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் தற்போது காணப்படுகின்ற ஒத்துழைப் பினை சுட்டிக்காட்டி, கண்காணிப்பு மற்றும் ரோந்து, இருதரப்பு கடற்படையினர் இடையிலான நேரடி இணைப்புகள் மூலமாக கிரமமான தொடர்புகளை மேற்கொள்ளல், மற்றும் ஏனைய சகல செயற்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றில் மேம்பட்ட ஒத்துழைப் பினை தொடர இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர். அத்துடன் துரதிஷ்டவசமாக ஏற்பட்ட காயங் கள் மற்றும் உயிரிழப்புகளுக்கு வழிவகுத்த சம்பவங்கள் அண்மையில் கடலில் இடம்பெற்றிருந்தமை தொடர்பாக கவனத்துக்கு கொண்டுவந்திருந்த இந்திய தரப்பு, பலத்தினை பயன்படுத்துவது அனைத்து சந்தர்ப்பங்களிலும் தவிர்க்கப்பட வேண்டியதாகுமெனவும் கடுமையாக வலியுறுத்தியுள்ளது.

அதுமட்டுமல்லாமல், மீனவர்களின் விவகாரங்கள் குறித்து தொடர்ந்து கலந்துரையாடுவதற்காக இரு நாடுகளினதும் மீனவ அமைப்புகளின் கூட்டத்தினை விரைவில் நடத்தவேண்டுமெனவும் இந்திய தரப்பினரால் வலியுறுத்தப்பட்டிருந்தது. மீனவர்கள் பிரச்சினைக்கு, பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளத்தக்கதும் நீண்டகாலம் நீடித்திருக்கக் கூடியதுமான தீர்வு ஒன்றினை எட்டுவது குறித்த விடயங் கள் தொடர்பாக பரந்த பேச்சுகளை முன்னெடுப்பதற்காக கிரமமாகவும் தொடர்ச்சியாகவும் சந்திப்புகளை மேற்கொள்ளவும் இருதரப்பும் இணங்கியுள்ளன.

## வெளிப்படை ... தொடர்ச்சி ...

இலங்கைக்கான மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாக உள்ளது. இங்கு நேரடியாக அதிக அமெரிக்க முதலீட்டைப் பார்ப்பது அற்புதமானது. வர விருக்கும் ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு இரு வழிகளிலும் விரிவடைவதை காண விரும்புகிறோம்.

புதிய அரசாங்கம் முதலீட்டு சூழலை வலுப்படுத்தவும், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை செயல்படுத்தவும், வணிக நட்பு ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தவும் முடிந்தால் இன்னும் அதிகமான முதலீட்டாளர்களை ஈர்க்க முடியும்.

முதலீட்டுச் சூழல் வலுவாக இருந்தால் நிறுவனங்கள் வரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவமானது பகிரப்பட்ட இலக்குகள் மற்றும் பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் பயிர் விளைச்சலை அதிகரிப்பதில் இருந்து, கொழும்பில் உள்ள நகர்ப்புற ஏழைகளுக்கு தீர்வுகாண பாடசாலைகளுக்குமதியஉணவுதிட்டத்தைவிரிவுபடுத்தியது முதல் பல்வேறு ஒத்துழைப்புகளை அமெரிக்கா வழங்கி வருகிறது. இலங்கையின் கடல் பாதுகாப்பை வலுப்படுத்தல், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கும் அமெரிக்கா ஒத்துழைப்புகளை வழங்கி வருகிறது.’’ என்றார்.

## 1987இன் யாழ் ... தொடர்ச்சி ...

தாக்குதலுக்குப் பழி வாங்கும் நடவடிக்கையாகவே இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி சீக்கியர்களால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

**தொடரம்...**